Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 15 ஆம் நாள் (01.10.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 01

**ஓட்டோ சப்ளையர்ஸ்**



மிகத் துல்லிய
ரீபோறிங் ரீகிறைன்டிங்
வேலைகளுக்கும்
அனைத்து Japan போல்
பெயரிங்குகளுக்கும்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/004) 021-2222047

# தமிழருக்கு உரிமைகள் வழங்க சிங்கள மக்கள் அரசுக்கு அழுத்தம் தரும் காலம் வந்துள்ளது!

## சு.ப.தமிழ்ச்செல்வன் தேசிய மகளீர் மாநாட்டில் பேச்சு



(கிளிநொச்சி நிருபர்)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய சிறிலங்காப் படையினர் தமிழர் தாயகப் பகுதியில் மக்கள் வாழும் இடங்களில் இருந்தும், பொது இடங்களில் இருந்தும் வெளியேறி உறுதியான சமாதானம் கிடைப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் நடந்த தேசிய மகளிர் மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு பேசினார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

எமது தேசியத் தலைவரின் திட்டமிடலாலும், வழிநடத்தலாலும் 17,600 இறக்கும் மேற்பட்ட மாவீரர்களின் தியாகத்தாலும் கிடைத்துள்ள இன்றைய சமாதானச் சூழலை தமிழ் மக்கள் யாவரும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இன்று கிடைத்துள்ள சமாதானச் சூழ்நிலையை உறுதிப்படுத்துவது மக்களின் கைகளிலேயே இருக்கிறது. இன்று கிடைத்துள்ள சமாதானச் சூழல், சிங்கள மக்கள் மத்தியில் பெரியதொரு மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மனமாற்றம் அவர்களை முழுமையாகப் போருக்கு எதிராகக் குரல்கொடுக்க வைத்துள்ளது.

தமிழ் மக்களுக்கு உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்று சிங்கள மக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் காலம் வந்திருப்பதாகவும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியை வேறு பகுதிகளுக்கும் பகிரத் திட்டம்!

## அரசாங்க அதிபர்களுடன் நாளை கொழும்பில் மாநாடு

(கணேஷ்)

**வடக்கு-கிழக்கில் யுத்தத்திற்கு பிந்திய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களுக்கென வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதி உதவியை - நாட்டின் ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்குமெனப் பகிர அரசாங்கத்தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

நீண்டகால யுத்தத்தினால் சிதைந்துபோயுள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கும் மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்ளவுமே ஆரம்பத்தில் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. இதற்காக அண்மையில் "RRR செயற்திட்டம்" என்ற பெயரில் புதிய செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயற்திட்டத்தில் அமுல் செய்வதற்குத் தேவையான பெருமளவு நிதியை வெளிநாடுகளிடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



"கஞ்சிக்கு உப்பில்லை எண்டது எங்கடை பிரச்சினை, பாலுக்கு சக்கரையில்லை எண்டது அவையின்ரை பிரச்சினை"

## மருதங்கேணி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான - ஆசிய அபிவிருத்தி வங்கியின் 'நிக்கொட்' திட்ட நிதிஒதுக்கீடு யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பிரதேச செயலர் பிரிவிலிருந்து வெளியேறிய மக்கள் அண்மையில் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். எனவே இப்பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான அனைத்து முயற்சிகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டுவருகிறது.(க)

# நாடு முழுவதற்குமாக நிதி திரட்ட ஆர்மிரேஜ் - மொறகொட முயற்சி!

(வோஷிங்ரன்)

அமெரிக்க துணை இராஜங்க அமைச்சர் றிச்சார்ட் ஆர்மிரேஜ், இலங்கைக்கான நிதிசேகரிப்புத்திட்டமொன்றை அமைப்பொழுங்குக்கு உட்பட்ட வகையில் ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளார்.



இந்த அமைப்பொழுங்கு சார்ந்த திட்டத்திற்கு உலகளாவியரீதியில் பெரும் ஆதரவைப் திரட்டமுடியும் என அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தூதுக் குழுவுடன் தாய்லாந்தில் பேச்சில் ஈடுபட்டிருந்த அரசாங்கத்தரப்புக் குழுவில் இடம்பெற்றிருந்த பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட பிரிட்டனுக்கு சென்றிருந்தார். அங்கு பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திப் பிரிவின் இராஜாங்கச் செயலர் திருமதி கிளயர் சோட், அமைச்சரைச் சந்தித்து இலங்கையை போரழிவிலிருந்து மீட்டெடுத்து கட்டியெழுப்புவதற்



குரிய அபிவிருத்தித் தேவைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இருவாரங்களில் பாலசிங்கம் வன்னிக்கு வருகைதருவார்!

(கொழும்பு நிருபர்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையமூடாக இன்னும் இருவாரத்தில் வன்னிவந்து சேருவார் எனத் தெரியவருகிறது.

கடந்த முறை அன்ரன் பாலசிங்கம் மாலைதீவிலிருந்து கடல் விமானத்தின்மூலம் வன்னி வந்துசேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. வன்னிவரும் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்து பேச்சுவார்த்தை தொடர்பாகத் தலைவர் பிரபாகரனுடன் கலந்துரையாடவுள்ளார்.

## தமிழர்களைத் திருப்பியனுப்பும் சூழலை ஆராய ஜேர்மன் குழு யாழ். விஜயம்!

(ஜேர்மனியிலிருந்து ஆர்.சந்திரன்)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்புவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதா? என்பதை ஆராய்வதற்காக ஜேர்மனியிலிருந்து எட்டுப்பேர் கொண்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள் குழுவொன்று நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

ஜேர்மனியில் - அரசியல் தஞ்சம் கோருவோரின் மனுக்களை விசாரிக்கும் உயரதிகாரி வோல்ற்றர் ஹெலரும் இக்குழுவுடன் வருகின்றார்.

யாழ்ப்பாணம் வரும் குழுவினர் இங்குள்ள நீதியரசர்களுடனும் அரசசார்பற்ற அமைப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர்.

# வட. -கிழக்கு புனரமைப்பில் பிரிட்டனின் பங்கு என்ன? தமிழ்ச்செல்வனுடன் தூதுவர் இருமணிநேரப் பேச்சு!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு முயற்சிகளில் எவ்வாறு தனது பங்களிப்பை செய்ய முடியும் என்பது தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டன் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் வன்னி சென்று திரும்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவொன்றைச் சந்தித்த அந்த இராஜதந்திரி, விரிவான முறையில் இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் சமாதனப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றிய முழுமையான விபரங்களையும் விடுதலைப் புலிகளின் சிந்தனையியல் நிலைப்பாடுகள் பற்றிய விடயங்களையும் தமிழ்ச்செல்வனிடமிருந்து கோரிப்பெற

(12 ஆம் பக்கம் பார்க்க)

**இணையத்திலும் நமது ஈழநாடு...!**
**www.eezhanadu.com**

தாச்சிமுதல் கிரிக்கெட் வரை
ஊஞ்சல்முதல் உலகு வரை
விளையாட்டு அரங்கம்

அறிவின் ஊற்றாய்
மாணவர் மலர்

குளிர்மை தரும் நிலவின் ஒளியாய்
இலக்கியச்சோலை

பலதையும் ஆராயும்
வி. ஐ. பி. விருந்தினர் பக்கம்

காதல் முதல் கல்லூரிகள் வரை
முத்துச்சிதறல், பல்சுவை அரங்கு

கும்மாளமிடும்
உங்கள் வீட்டுச் சுட்டிகளுக்கு
சிறுவர் அரங்கம்

உலகின் எட்டுத் திக்கிலிருந்தும்
அதிரடித் தகவல்கள்

சுடச்சுட உள்நாட்டுச் செய்திகள்

பெண்களுக்காக
சிநேகிதியே

ஒவ்வொரு தினமும்
ஒவ்வொரு சிறப்பிதழ்
இரண்டு பக்கங்கள் நிறைய

நாள்தோறும் பலன் சொல்லும்
இன்றைய நாள்
இனிய நாள்
வாரந்தோறும் 'அதிர்ஷ்டவாரம்'

சந்தை நிலவரத்திற்கு
தொழில்மலர்

எல்லாவற்றையும் தரும் ஒரேயொரு பத்திரிகை,
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன்

**செல்வன்**

**சு. ஞானாநந்த சர்மா**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று, கல்லூரியில் முதலிடத்தைப் பெற்றவரில் ஒருவராக வந்தமையைப் பாராட்டுவதுடன் அவருக்குக் கல்வி கற்பித்து அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி அவர் மேலும் கல்வியில் சிறப்புற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி/020) - உறவினர்கள்.


* தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் * அடையாள அட்டை கவரிடுதல்
63 வருட றைக்கிளினேர்ஸ் மூன்றும் இணைந்த சேவை.
நாடுங்கள்
சன்லையிற் றைகிளீனர்ஸ்
பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.
கிளை : சன்லைற் மல்ரி சேவிஸ்
சன்லைற் தொலைத் தொடர்பு சேவை
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
T.P : 2223871
2222741


பாரத் ஸ்ருடியோ
82/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.



அல்டி எலக்ரோனிக்ஸ்
நமது ஈழநாடே வருக! வருக!
எமது நாளிதழ் வளர்க! வாழ்க!
ரீவி, டெக், றேடியோ, வீடியோ CDபிளேயர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், அன்ரனா பூஸ்ரர் வகைகள், மற்றும் பொருட்களுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்.


அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவகலாவின் உன்னத சேவைகள்


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழான நமது ஈழநாட்டிற்கு எங்கள் வாழ்த்துக்கள்
கனன் போட்டோ கொப்பி மெசின் உதிரிப் பாகங்கள்
டிஜிட்டல் கொப்பி பிரிண்டர்(Super Fax) Fax மெசின்,
IbM கணனிகள் மற்றும் ஜன்மர் (Yanmar) மின்பிறப்பாக்கிகள் மற்றும்
வீட்டு மின்சார பாவனைப் பொருட்களுக்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
விநியோகஸ்தர்:-
நவகலா மெற்றோபோலிட்டன்
200, காங்கேசன் சாலை, யாழ்ப்பாணம்.

# வன்னியில் இருந்து யாழ். திரும்பியோருக்கு ரூபா 65 ஆயிரம் நவம்பரில் கிடைக்கும்!

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து யாழ். திரும்பிய மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டுக்குள் வந்து மீளக் குடியேறிய மக்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. இவற்றை விரைவாக்குவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்குமான 2ஆயிரம் ரூபா தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் - அசையும், அசையாச் சொத்துக் களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 65 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை நவம்பர் மாத இறுதிக்குள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை இக்கொடுப்பனவுகள் யாவும் - கட்டம் கட்டமாக அல்லாமல் மொத்தமாகவே வழங்கு வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. (க)

## குதிரை வாகனங்கள் வெளியாருக்கு விற்பனை!

தமிழர் பாரம்பரிய சொத்துகள் வெளியாருக்கு விற்பனை செய்யப்படுவதை நிறுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் இத்தகைய விற்பனை முயற்சிகள் தொடரவே செய்கின்றன.

அராலியில் கடந்த வெள்ளியன்று கோயில் பாவனையில் இருந்த இரண்டு குதிரை வாகனங்கள் பன்னிரண்டாயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டுள்ளன.

இவ்வாறான கலைப்பொக் கிஷ வர்த்தகத்தில் தென்பகுதியிலிருந்து வருகைதரும் சில தமிழ் வர்த்தகர்களும், இங்குள்ள தரகர்களும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (59)

## யாழ். வைத்தியசாலைக்கு ஐந்து மாடிக் கட்டடம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனைக்கென புதிய ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது.

தற்போது மேற்படி வைத்திய சாலையில் நிலவும் இடநெருக்கடியைத் தவிர்க்கும் நோக்குடன் மிக நவீன வசதிகளை உள்ளடக்கியதாக இப்புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்துக்கான மதிப்பீட்டு வேலைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. மதிப்பீட்டு அறிக்கை அமைச்சின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியும், தேவையான நிதிஒதுக்கீடும் கிடைத்தவுடன் உடனடியாக கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (க)

## குடாநாட்டில் புனரமைப்பை துரிதமாக்க நவீன உபகரணங்கள் விரைவில் வரும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய அணுகுமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.

பல்வேறு புனரமைப்புச் செயற்திட்டங்களை ஒரேசமயத்தில் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அத்துடன் மிக விரைவாகவும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காகவே நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

இவற்றைவிட கட்டுமானப்பணிகளுக்கு பயன் படுத்தப்படும் கனரக வாகனங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிக விரைவில் குடாநாட்டுக்குத் தேவையான மேற்படி உபகரணங்களும், இயந்திர சாதனங்களும் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்து வரப்படவுள்ளன. ஏற்கனவே ஒரு சில இயந்திரங்கள் யாழ்ப்பாணத்தில் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. (க)

## அஜித் போயாகொட குடும்பத்தவருடன் வடக்குக்கு மகிழ்ச்சிப் பயணம்

(லண்டன்)

விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதியாகவிருந்து விடுவிக்கப்பட்ட கடற்படை கப்டன் அஜித் போயாகொட, தனது குடும்பத்தவர் சகிதம் வடபகுதிக்கு மகிழ்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறுகையில் - தானும் ஏனைய கைதிகளும் போர்க்கைதிகள் பரிமாற்றத்தின் மூலமாக விடுதலை செய்யப்பட்ட அந்தத் தருணம், தனது வாழ்நாளில் உச்சமான மகிழ்ச்சிகரமான தருணமாக அமைந்த



விடுவிக்கப்பட்ட மகிழ்ச்சியில் மனைவியுடன் போயாகொட.

தாகக் கூறினார். அந்த நாளுக்காக தாம் ஏங்கியபடி காத்திருந்ததாகவும் தெரிவித்தார்.

உணர்வு பொங்கும் அந்த நாளை தன்னால் வார்த்தைகளால் விபரிக்க முடியவில்லை என்றும் கூறினார்.

முன்னைய அரசாங்க காலத்தில் சமாதான முயற்சிகள் சரியான நகர்வுத் திட்டமோ நம்பிக்கையோ இன்றி மேற்கொள்ளப்பட்டது. அதனால் ஒரு சமாதானப் பேச்சு நடைபெறும் என்று தான் ஒருபோதுமே நம்பிஇருக்கவில்லை என்றும் பின்னர் தேர்தல் காலங்களில் சமாதான செயற்திட்டத்தை முன்வைத்து தற்போதைய பிரதமர் பரப்புரைகளில் ஈடுபட்டபோது தனக்கு நம்பிக்கை வளர்ந்ததாகவும் கப்டன் போயாகொட கூறினார்.

புலிகளும் நீங்கள் வீட்டுக்கு போகக்கூடிய காலம் வருமென உறுதி அளித்திருந்தனர். கைதிகள் பரிமாற்றத்தின்போது எதிரும் புதிருமாக போரிட்ட இரு தரப்புக்களும் மகிழ்ச்சிகரமான உணர்வுகளை பரிமாறிக் கொண்டு ஒன்றுகூடியமை மிக உன்னதமான தருணமெனக் கூறிய அவர் உண்மையில் சமாதானத்துக்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கட்டும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

மீண்டும் வடக்குக்கு செல்வீர்களா என்று செய்தியாளர் கேட்டபோது, நீண்டகாலம் வடக்கில் வாழ்ந்துள்ளேன். என்னுடைய மனைவி, பிள்ளைகளுடன் இணைந்த பெரு மகிழ்ச்சியில் உள்ளேன். எனது குடும்பத்தினருடன் மீண்டும் வடக்குக்கு ஒரு மகிழ்ச்சிகரமான உல்லாசமான பயணத்தை மேற்கொள்ளவுள்ளேன். கடந்த எட்டு வருடங்களாக நான் எங்கு வாழ்ந்தேன் என்பதை அவர்களுக்கு காட்டுவேன் என்று உணர்வு பொங்கத் தெரிவித்தார்.

## மூன்று மாதங்களுக்கு மேலாகியும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்னும் கிடைக்கவில்லை

(நெல்லியடி)

மூன்று மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்து பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இதுவரை சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினருடன் தொடர்பு கொண்ட போது, கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகளே விண்ணப்பங்களையும், ஆவணங்களையும் கொழும்பிற்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்றும், எனவே இது தொடர்பில் தாம் எதுவும் செய்யமுடியாது எனவும் கைவிரித்தனர்.

எனினும் - கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் அனுமதிப் பத்திரங்களை உரியவர்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இவ் அதிகாரிகள் தெரிவித்தனர். நடமாடும் சேவையின் பின்னர் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு விண்ணப்பித்த பலர் பரீட்சையில் சித்தி பெற்று தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (13)

## கல்வயல் காணியில் வெடிபொருட்கள் மீட்பு

(சரசாலை)

கல்வயல் பெருங்குளம் பிள்ளையார் கோயில் அருகில் காணி ஒன்றிலிருந்து பெருமளவு வெடிப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் கேணியடிப்பகுதியில் காணியின் உரிமையாளர் தனது காணியை துப்பரவு செய்து கொண்டிருந்தவேளை வெடிக்காத நிலையில் எறிகணைகள், கைக்குண்டுகள், சுமார் 25 மிதிவெடிகள் என்பன காணப்பட்டன. இதையடுத்து படையினர் வரவழைக்கப்பட்டு இந்த வெடிப்பொருட்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டன. (34)

## கடும் வரட்சியால் விவசாயம் பாதிப்பு

(உரும்பிராய்)

கடும் வரட்சி காரணமாக விவசாய நிலங்களில் விளைச்சல் குறைந்துள்ளதாக உரும்பிராய், ஊரெழு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழைவீழ்ச்சி இல்லாத காரணத்தினால் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தம்மால் பெருமளவு பயிர்களை பயிரிட முடியவில்லை என்றும், சமாதான சூழ்நிலை காரணமாக கொழும்பிலிருந்து போதிய அளவு உரவகை, கிருமிநாசினிகள் வருகின்றபோதிலும் அதனைக் கொண்டு அதிக விளைச்சல்களை பெறமுடியாதுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் இந்த வரட்சிநிலை நீடிக்குமானால் தாம் வறுமை நிலைக்குட்பட நேரிடும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (84)

## அகற்றப்படாத மிதிவெடிகளால் தரிசாக கிடக்கும் விளைநிலங்கள்

(இளவாலை)

இளவாலை பிரதேசத்தில் கைவிடப்பட்ட காவலரண்களை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் காரணமாக அங்குள்ள மக்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

எருக்கலம்புலம், பருத்திப்புலம், [illegible]த்தை, குசவபிட்டி ஆகிய இடங்களில் படையினரால் கைவிடப்பட்ட காவலரண்களை அண்டிய பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

மிதிவெடிகளை அகற்றித்தரும்படி அதிகாரிகளிடம் கேட்கப்பட்ட போதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக அப்பகுதிகளில் வாழும் 200க்கு மேற்பட்ட விவசாய குடும்பங்கள் தமது நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாத நிர்க்கதிக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் சிக்கி ஒருவர் பலியானதுடன், இருவர் கால்களை இழந்தனர் எனவும், பதினைந்திற்கு மேற்பட்ட கால்நடைகள் படுகாயம் அடைந்துள்ளன என்றும் தெரியவருகின்றது.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் அதிகளவிலான விளைச்சல்களைத் தரக்கூடிய விவசாய நிலங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(71)

## சுதந்திரக் கட்சிக்குள் குத்துவெட்டு; அ'புரம் எம்.பி. உயிருக்கு அச்சுறுத்தல்!

(அநுராதபுரம்)

கட்சிக்குள் செயற்படும் காடையர்கள் தம்மைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் S.N.சந்திரசேன கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களையும், ஆதரவாளர்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேசிய கூட்டமொன்றுக்கு சமுகமளிக்க முடியாததற்கான காரணத்தினைச் சுட்டிக்காட்டி எழுதிய கடிதம ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு அரசாங்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படி இந்த சந்திப்பிலே ஆதரவாளர்கள் ஜனாதிபதியை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

இதனை அடுத்து அந்த மாவட்டத்தின் கட்சி அமைப்பாளர்கள் திறமை அற்ற வகையில் செயற்படுகின்றனர் என்று கண்டனம் தெரிவித்தார். (க)

## தென்மராட்சி மீனவர்களுக்கு மீனவ அடையாள அட்டை

(நாவற்காடு)

தென்மராட்சியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் மீனவ அடையாள அட்டை வைத்திருக்க வேண்டுமென படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதையடுத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருபவர்கள் மீனவ அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து வருகின்றனர். இதே சமயம் ஒரு தொகுதி மீனவருக்கு ஏற்கனவே மீனவ அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

## இராணுவம் தடைசெய்த வீதியால் தென்பகுதி மக்கள் பயணம்!

(இளவாலை)

கீரிமலை - சேந்தான்குளம் ஊடாக மாதகலுக்குச் செல்லும் வீதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படாதபோதும், தென்பகுதி உல்லாசப் பயணிகளின் வாகனங்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாதகலில் உள்ள படையினரைச் சென்று சந்தித்துக் கொள்வதற்கு வசதியாகவே, படையினர் தென்பகுதி மக்களின் வாகனங்களை இவ்வீதியூடாகப் பயணம் செய்யப் படையினர் அனுமதித் துள்ளனர்.

ஆனால் இந்தப் பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் சேந்தான்குளம் - மாதகல் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யத் தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதி மக்கள் இந்த வீதியூடாகப் பயணிக்க அனுமதிக்கப்படுகின்றபோது தமக்கு ஏன் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று இப்பகுதிக் குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (41)

## இரண்டாவது 'டைட்டானிக்' துயரம்

# செனகல் மிதவைக் கப்பல் விபத்து; பலியானோர் தொகை ஆயிரம் பேர்!

(டகார்)

ஆபிரிக்க நாடான செனகலில் இடம்பெற்ற மிதவைக் கப்பல் விபத்தில் கொல்லப்பட்டோரின் தொகை ஆயிரமாக உயர்ந்துள்ளது.

செனகல் தலைநகர் டகாருக்கும் சிடுஞ்சடுக்கும் இடையில் உள்நாட்டுப் போக்குவரத்தில் ஈடுபட்ட மிதவைக் கப்பல் கடந்த சனியன்று விபத்துக்குள்ளாகி மூழ்கியிருந்தது.

1034 பயணிகளை ஏற்றிச் சென்ற இக்கப்பல் மூழ்கியதையடுத்து நடத்தப்பட்ட தேடுதல்களின்போது 64 பேரை மட்டுமே மீட்கமுடிந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த 350 பேரின் சடலங்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர். எஞ்சியோர் காணாமற்போயுள்ளனர். இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

படகின் கொள்ளளவுக்கும் இரண்டு மடங்கான பயணிகள் ஏற்றப்பட்டதாலும், சீரற்ற காலநிலையாலும் தான் இவ்விபத்து சம்பவித்ததாக தெரியவருகின்றது.

இச்சம்பவத்தால் ஆத்திரமடைந்து காணப்பட்ட மக்கள் மத்தியில் தலைநகர் டகாரில் உரையாற்றிய செனகல் ஜனாதிபதி அடோவிலே வேயிற், பேரழிவிற்கு அரசாங்கம் பொறுப்பேற்பதாகவும், பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்கவுள்ளதாகவும் உறுதியளித்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த மூன்று நாட்களை துக்கதினமாக செனகல் அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

விபத்துக்குள்ளான கப்பலில் செனகல் நாட்டவர்களே அதிகமாக பயணம் செய்திருந்தபோதும் ஸ்பானிய, சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாட்டவர்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது "டைட்டானிக்" என்று இக்கப்பல் விபத்தை சர்வதேச ஊடகங்கள் வர்ணித்துள்ளன.

## இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஐவர் சுட்டுக்கொலை!

(பெங்களூர்)

பெங்களூரில் தமிழக, கர்நாடக பொலிஸார், இஸ்லாமியத் தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர்.

குறித்த மறைவிடத்தைப் பொலிஸார் சோதனையிட முனைந்தபோ[illegible] தீவிரவாதிகள் தாக்குதலை நடத்[illegible]னர். பொலிஸாரின் பதில் தாக்குதலில் ஒரு பெண் உட்பட ஐவர் பலியாகினர்.

கொல்லப்பட்டவர்களுள் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த இமாம் அலி என்ற நபரும் அடங்குவதாகவும், இவர் பல்வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சதாமின் மாளிகை, பள்ளிவாசல்களிலும் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்!

### ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழு வலியுறுத்து

(வியன்னா)

ஐ.நா. ஆயுதப் பரிசோதனை அணியின் தலைவருக்கும், ஈராக்கின் தூதுக்குழுவொன்றுக்கும் இடையில் வியன்னாவில் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஆயுதப் பரிசோதனைக் குழுவைக் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பணியாற்றத் தான் அனுமதிக்கத் தயார் என இருவாரங்களுக்கு முன்பு ஈராக் அறிவித்திருந்தது. அதனையடுத்து இப்பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன.

இப்பேச்சுக்களில் பரிசோதகர்களின் போக்குவரத்து, விசா, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஆராயப்படுகின்றன. எந்த இடங்களில் எப்போது எப்படி பரிசோதிப்பது என்பது சர்ச்சையான விவகாரமாக உள்ளது.

ஆயுதப் பரிசோதனை அணி சதாம் ஹூசைனின் மாளிகை வளாகம், மற்றும் பள்ளிவாசல்கள் ஆகிய இடங்களிலும் கட்டுப்பாடுகள் இன்றி பரிசோதனைகளை மேற்கொள்ள இடமளிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

## முற்றுகையிலிருந்து வெளியே வந்த அரபாத்துக்கு மக்கள் பெரும் ஆதரவு!

(ஜெருசலேம்)

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைமையகமும் பலஸ்தீன அதிகார சபையின் நிர்வாக மையமும் அமைந்திருந்த ரமழா நகரிலுள்ள கட்டடத் தொகுதியின் மீதான தனது முற்றுகையை இஸ்ரேலிய இராணுவம் தளர்த்திக்கொண்டது.

இத்தளர்த்தலின் மூலம் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த அரபாத் முற்றுகையிலிருந்து வெளியேறக் கூடியதாக இருந்திருப்பினும் அலுவலகத்தினுள்ளே இன்னமும் உள்ள சந்தேக நபர்களை அரபாத் கையளிக்க வேண்டும் அல்லது தாம் கைது செய்ய தயாராக உள்ளோம் என இஸ்ரேலிய இராணுவம் அறிவித்தது.

எனினும் இஸ்ரேலியப் படையினர் எதிர்பார்க்கும் பலஸ்தீன தீவிரவாதிகள் அரபாத்தின் அலுவலகத்திலிருந்து முற்றுகைக்கு முன்னரே வெளியேறிவிட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவத்தின் முற்றுகை நடவடிக்கை பலஸ்தீன மக்களின் செல்வாக்கையும் ஆதரவையும் அரபாத்துக்கு இன்னும் கூடுதலாக்கி உள்ளது என்றும் மேற்கத்தைய செய்தி முகவர்கள் ஜெருசலேத்திலிருந்து தமது ஊடகங்களுக்கு அறிவிக்கின்றனர்.



முற்றுகையிலிருந்து வெளி[illegible]யேறிய அரபாத்தை அ[illegible]ருக்காக காத்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆரத்தழுவி முத்தமிட்டு மகிழ்ந்தனர்.

ஈராக்குடனான தனது நெருக்கடியை அரபாத்தின் முற்றுகை மேலும் சிக்கலாக்குமெனக் கருதிய அமெரிக்கா, முற்றுகையை விலக்கும்படி இஸ்ரேலைக் கேட்டுக்கொண்டபோதும் இஸ்ரேலிய அரசாங்கம் முற்றுகைத் தளர்வையே மேற்கொண்டது. அத்துடன் பலஸ்தீன தலைவர் தொடர்ந்தும் ஒரு வீட்டுக்காவல் கைதி போலவே உலாவித்திரியும் நிலையிலுள்ளார். அவர் சுதந்திரமாக பலஸ்தீனத்தின் ஏனைய பகுதிகளுக்கோ வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ளவோ இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

## சதாமை அகற்றும் அமெரிக்காவின் யுத்த உபாயங்கள் வெற்றியளிக்குமா?

அமெரிக்கா, ஈராக்கிலிருந்து சதாமின் ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதற்கான ராஜதந்திர மும்முரங்களில் ஈடுபட்டுள்ளது. இராணுவ ரீதியான முன்னாயத்தங்களை ஏலவே தனது ஆருயிர் கூட்டாளியான பிரிட்டனுடன் சேர்ந்து ஆயத்தம் செய்து விட்டது அமெரிக்கா. சதாம்ஹூசைன் இஸ்லாமிய அடிப்படைவாதியா? அவரது ஆட்சி இஸ்லாமிய வாதத்தை தளமாகக் கொண்ட ஆட்சியா? இல்லை இல்லவேயில்லை. ஏன் சதாமை ஆட்சிபீடத்திலிருந்து அகற்ற அமெரிக்கா விளைகிறது. அமெரிக்கா சொல்லுகிற காரணம் என்னவெனில், சதாம் சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக உள்ளார் என்பதாகும்.

சரி, அப்படியானால் சதாமை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு அமெரிக்காவும் அதன் கூட்டாளி பிரிட்டனும் கூறும் காரணம் சரியா? சதாம் நல்லவரோ கெட்டவரோ என




ஆராய்வது இக்கட்டுரையின் பணியல்ல. ஆனால் சதாமின் சிந்தனாவாதம் அமெரிக்காவுக்கு சவாலாகவுள்ளது. அமெரிக்காவால் அமெரிக்காவுக்காக அமெரிக்காவின் உலகமாக இந்தப் பூகோளத்தை சித்தாந்த அடிப்படையிலும் பொருளியல் ரீதியிலும் அரசியல் இராணுவ மூலோபாயங்களின் அடிப்படையிலும் - உலகமயமாக்கல் பூகோளமே, கிராமமாகச் சுருங்குதல் என்றெல்லாம் கூறிக்கொண்டு அமெரிக்கமயமாதலுக்கு உட்படுவதை சதாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது அமெரிக்க ஏகபோகிகளுக்கு மிகத்தெளிவாக தெரிந்த உண்மை. இப்படிப்பட்ட இந்த பிரகிருதியிடம் ஏவுகணைகளும், நியூக்கிளியர் ஆயுதங்களும், இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களும் இருத்தல் இப்பூகோளத்தை அமெரிக்காவின் மொத்தக் குத்தகைக்கான கிராமமாக மாற்றுவதில் பெரும் தடைக்கல்லாகவே இருக்கும். தமது சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற குர்திஷ் மக்களை சதாம் நச்சுவாயுவால் கொன்றொழித்தமையை தனக்கான உரிமைக் குரல் எழுப்பும் ஏதுவாக்க அமெரிக்கா முனைந்து அதில் வெற்றி பெற்றதன்மூலம் - ஈராக்கிய இறைமையுள்ள பிரதேசத்தின் மேல் விமானப் பறப்பற்ற பிரதேசத்தை அமெரிக்காவாலும் பிரிட்டனாலும் கண்ணும் கருத்துமாகப் பேணமுடிகிறது. குவைத் மீதான ஈராக்கிய படையெடுப்பால் தனக்குத்தானே குழிதோண்டிக் கொண்ட சதாமின் மற்றொரு இராஜதந்திர தோல்வியாக நச்சுவாயுத் தாக்குதலைப் பார்க்கலாம்.

சதாமை ஆட்சியிலிருந்து இறக்குவதற்கான அரசியல் உட்கட்டுமானங்களை ஈராக்குக்குள் உருவாக்குவதில் மேலோட்டமான வெற்றிகளையென்றாலும் அமெரிக்கா எட்டியுள்ளது. தனக்கெதிரானவர்களை ஈவிரக்கமற்றமுறையில் அழித்தொழிக்கும் சதாமின் நடவடிக்கைகள் இவ்விடயத்தில் எதிர்வாத அரசியல் அணிகளின் உருவாக்கத்தை மந்தப்படுத்தியதே ஒழிய முற்றாக தடுத்துநிறுத்தவில்லை. சதாமுக்கு எதிரான அரசியல் அணி உருவாக்கத்தில் அமெரிக்கா தனது நிதியையும் வல்லமையையும் நன்கு திட்டமிட்டு முதலீடு செய்தது எனலாம்.

தமது இலக்குகளை விஸ்தரிப்பதில் திடகாத்திரமாகவுள்ள அமெரிக்காவும் கூட்டாளியான பிரிட்டனும் தத்தமது சுயபாதுகாப்புத் திட்டங்களின் வெளித்தோற்றப்பாடாகவே சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் என்ற கருத்தியலை முன்வைப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் சதாம் தனது நாசகார ஆயுதங்களை பிரான்ஸ், சீனா, ரஷ்யா, ஜேர்மனி, யப்பான், இந்தியா போன்ற நாடுகளுக்கு எதிராக பயன்படுத்த விரும்புவாரா என்ற கேள்வி எழுகின்றது. ஏன் அமெரிக்காவுக்கு நேசமாகவுள்ள இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராகத்தானும் அவர் பயன்படுத்துவாரா? இல்லை எனலாம். ஆனால் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேலும் உயிர்த்தோழனான பிரிட்டனும் தாம்தாம் பயப்படுவதில் நியாயம் உண்டு. இந் நிலையில் அமெரிக்கா தனக்கும் தனது ஓரிரு கூட்டாளிகளுக்கும் உள்ள அச்சுறுத்தலை அகில உலக அச்சுறுத்தலாகக் காட்டமுனைந்து ஈராக் மீதான பாரிய இராணுவ நடவடிக்கைக்கு உலக நாடுகளின் அங்கீகாரத்தை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கூடாக வேண்டிநிற்கின்றது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் சேர்ந்து தீர்மானமாகக் கொண்டுவரவுள்ள நகல் வரைபின் பிரதான அடிப்படைகள் யாதெனில், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு வாரகாலத்துள் ஈராக் சகலவழி வகைகளையும் இலகுபடுத்தித் தனது நாட்டுக்குள் ஆயுதப் பரிசோதகர்களின் குழுவை அனுமதிக்கவேண்டும். தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குள் சகல ஏவுகணைத்தளங்கள், நியூக்கிளியர், உயிரியல், இரசாயன ஆயுத உற்பத்தி தொடர்பான ஆவணங்கள், இராணுவ விஞ்ஞான தொழினுட்ப உற்பத்தி மையங்கள், களஞ்சியங்கள் எல்லாவற்றையும் திறந்து முழுமையாக இரகசியங்கள் எதுவுமின்றிக் காட்டவேண்டும். இதற்குள் சதாமின் மாளிகை வளாகமும், பள்ளிவாசல்களும் அடங்கும். இவ்விடயங்களுக்கு ஈராக் உடன்படாவிட்டால் ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கையைக் கூட மேற்கொள்ளமுடியும் என்ற தொனியில் அந்த எச்சரிக்கை அமைகிறது.

**புவியரங்கன்**

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் இத்தீர்மான வரைபுக்கு ராஜதந்திர ஆதரவு தேடுவதற்கு ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருக்கும் அமெரிக்க இராஜதந்திரிகளும், பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்கள். அமெரிக்க அதிகாரிகள் மொஸ்கோவில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசியதில் "எவ்வளவு விரைவாக ஆயுதப்பரிசோதகர்கள் ஈராக்குக்குள் சென்று தமது பணியை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்று அவர்கள் பணியை ஆரம்பிப்பதை ரஷ்யா மிகவும் வரவேற்கும்" என்று வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளதுடன் இத்தீர்மான வரைபுக்கு நேரடியாக ஆதரவு தெரிவிப்பதில் ரஷ்யாவின் தயக்க நிலைகளையும் அவர் வெளியிட்டதாகத் தெரியவருகின்றது. இவ்விடயத்தில் ரஷ்ய அரசாங்கத்திற்கு ஒரு உள்நாட்டு நெருக்கடியும் உள்ளது. ரஷ்ய எதிர்க்கட்சியான சோஷலிஸ்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு எதிரான கடும் நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும்படி கேட்கின்றனர்.

இத்தீர்மான வரைபுக்கு பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிடமிருந்து ஆதரவு திரட்டும் முயற்சி கல்லில் நாருரிக்கும் கதையாக மிகக்கடினமான ராஜதந்திரப் பாடமாகவே அமெரிக்காவுக்கு உள்ளது. ஆனால் இம் முயற்சிகளில் இன்னமும் நம்பிக்கையோடு செயற்படவிரும்புவராகவே பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் காணப்படுகிறார். "எவ்வாறேனும் ஒரு முறையைப்பயன்படுத்தி சதாமின் ஆட்சி அகற்றப்படும்" என்று அவர் உறுதியாக தமது கருத்தை பிரிட்டனில் இடம்பெற்ற அவரது தொழிற்கட்சியின் மாநாட்டில் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஈராக்குக்கு எதிரான போர் விடயத்தில் அமெரிக்காவில் கணிசமான தொகை உள்ளூர் மக்களும் அமெரிக்க செனட்சபையும் கேள்விக்கிடமில்லாத ஒரு ஆதரவை நல்க விரும்பவில்லை. பிரிட்டனின் தொழிற்கட்சிப் பிரமுகர்களும், அங்கத்தவர்களும் சதாமுக்கு எதிரான போருக்கு பிளயருக்கு பக்கபலமாக நிற்கத் தயங்குகின்றனர். கடந்த வாரம் பிரிட்டிஷ் தொழிற்கட்சி மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் கலந்து கொண்டிருந்தவேளையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் போருக்கெதிரான ஊர்வலம் நடத்தித் தமது கருத்தை தொழிற்கட்சி மாநாட்டுக்கு அறிவித்திருந்தனர். பிரிட்டிஷ் பிரதமரிடம் மனமாற்றம் எதுவும் ஏற்படவில்லை. போருக்கான ஊக்கியாக உற்சாகத்துடனேயே பிரிட்டிஷ் பிரதமர் காணப்படுகிறார். அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து ஐ.நாவுக்கு ஊடாக பாதுகாப்புச் சபையின் தீர்மானமாக நிறைவேற்றிய பின்னர் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஈராக் தவறும் பட்சத்தில் ஐ.நா. அங்கீகரித்த இராணுவத் தாக்குதலாக ஈராக்மீது நடவடிக்கை மேற்கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் கிடைக்காவிட்டாலும் ஈராக்மீது ஒரு தலைப்பட்சமான இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் தயாராகலாம்.

# நன்றாக இருக்கிறது! நன்றாக வளரும்!!
# ஏசுவார்கள், எரிப்பார்கள் அஞ்சவேண்டாம்!
# உண்மையை எழுதுங்கள்! உண்மையாக எழுதுங்கள்!!



1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு
யோகர் சுவாமிகள் ஈழநாடு முதல் இதழை பார்வையிட்டபின் அருளிய ஆசிச்செய்தி



## மக்கள் விரும்பும் செய்திகளை நடுநிலையுடன் தரவேண்டும்!

யாழ்ப்பாண மக்களின் பெருமைக்குரிய பத்திரிகையாக விளங்கிய ஈழநாடு பத்திரிகையின் பாதையில், "நமது ஈழநாடு" யாழ்ப்பாணத்தில் வெளிவருவதையிட்டு நாம் அகமகிழ்கின்றோம். தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் பத்திரிகையாக இந்த நாட்டில் நீண்டகாலமாக வெளிவந்து இடையில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக 'ஈழநாடு' தடைப்பட்டு இருந்தமை எல்லோருடைய மனதையும் வேதனைக்குள்ளாக்கியது. யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை ஈழநாடு ஆகும். ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம், நாட்டின் அபிவிருத்தி, கல்வி வளர்ச்சி எனப் பல துறைகளுக்கும் அணிசேர்த்த பெருமை இப்பத்திரிகைக்குரியது. அதே பெருமையுடன் 'நமது ஈழநாடு' நல்ல முறையில் வெளிவந்து மக்களுக்கு வேண்டிய செய்திகளை அழகாகவும், நடுநிலை காத்தும் தரவேண்டும். பத்திரிகையின் வளர்ச்சிக்கு சேவை யாற்றும் பிரதம ஆசிரியர், ஊழியர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள்,**
**நல்லை ஆதீனம்.**



## தமிழ்த்தேசியத்தின் குரலாக சீரும் சிறப்புடனும் வாழ்க! வளர்க!

தமிழர் தாயகத்தின் முதல் தமிழ் தினப்பத்திரிகை ஈழநாடு. பணபலமும் பக்கபலமும் நிறையப் பெற்றவர்கள் இருந்தும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சிங்கள, ஆங்கில மொழிகளில் ஈழநாடு வெளிவரும் வரை எந்தத் தினப்பத்திரிகையும் வெளிவரவில்லை.

1959ல் வாரப்பத்திரிகையாகவும், 1960ல் வாரமிரு முறை பத்திரிகையாகவும் வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு 1961ல் தினப்பத்திரிகையாக உருப்பெற்றது.

வாரம் இருமுறை வெளிவந்து கொண்டிருக்கையில் பிந்திய பதிப்பு, விசேட பதிப்பு என வாரத்திற்கு 4, 5 பதிப்புக்களை செய்தியாசிரியராக பொறுப்பேற்றிருந்த நான் வெளியிட்டு வந்தேன்.

1961ம் ஆண்டின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஈழநாடு பத்திரிகை நல்ல முறையில் வழி நடத்தி தானும் வளர்ந்து மக்களின் நம்பிக்கையையும் பெற்றது. யாழ்ப பாணத்திலும் மட்டக்களப்பிலும் இன்று தமிழ்த்தினசரிகள் வெளிவருவதற்கு இதுவே வழிகாட்டியாக விளங்கிற்று.

இதன் தொடராக ஈழநாட்டின் வழியே இன்று 'நமது ஈழநாடு' மறுபிறவி எடுத்தாற்போல மக்கள் கரங்களில் புதுப்பொலிவுடன் தவழ்கின்றது.

21வருடங்கள் இரவும் பகலுமாய், ஊனுறக்கம் மறந்து ஈழநாடு வளர்ச்சிக்கு உழைத்தவன் என்ற பெருமையுடன் 'நமது ஈழநாடு' தமிழ்த் தேசியத்தின் குரலாக, மக்களின் நம்பிக்கையைப் பெற்று சீரும் சிறப்புமாக வளரவும் வாழவும் உளமார வாழ்த்துகிறேன். இதற்கு பணியாற்ற முன்வந்திருக்கும் பிரதம ஆசிரியருக்கும் நிர்வாகிக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் எனது நல்லாசிகள்.

நமது ஈழநாடு வளர்க!. வாழ்க!!

**எஸ்.எம். கோபாலரட்ணம்,**
(மூத்த பத்திரிகையாளர்,
(முன்னாள் பிரதம ஆசிரியர், 'ஈழநாடு')



## ஈழநாட்டைப் பார்த்த மகிழ்ச்சி மீண்டும் இன்று கிடைக்கிறது!

"நாம் இருக்கும் நாடு நமது என்பதறிந்தோம். இது நமக்கே உரியதாம் என்பதறிந்தோம்"

என்பது புதுமைக்கவி பாரதியின் எழுச்சிப்பாடலாகும். பத்திரிகாதர்மத்தைப் பேணி நீண்டகாலம் வெளிவந்த ஈழநாடு செய்தித்தாளின் வழியில் 'நமது ஈழநாடு' இன்று வெளிவருகிறது. ஆசிரியபீடங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட பத்திரிகை ஈழநாடாகும். அந்தக் காலத்திலே ஆசிரிய தலையங்கங்களை வாசித்து மகிழ்ச்சியடைய ஒரு கூட்டமிருந்தது. கே. பீ. கரன் ஐயா, இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் சபாரத்தினம் ஐயா ஆகியோரை இன்று நாம் நினைவு கூருகின்றோம். சொற்சுவையும், பொருட்சுவையும், நகைச்சுவையும் அக்காலச் செய்தித்தாளில் நான் கண்டு மகிழ்ந்தவையாகும். எம் போன்றோர் மீண்டும் அந்த மகிழ்ச்சியை அடைய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து இறையருளை வேண்டி ஆசிகூறி அமைகிறேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**



## தடைகள், தடங்கல்கள் கடந்து துணிவோடு பணி செய்ய வாழ்த்துக்கள்!


1959 ஆம் ஆண்டு முதல் தனித் தமிழ்த் தினசரியாக ஈழநாடு ஆற்றிய பணி தமிழ் மக்களின் வரலாற்றில் நிச்சயம் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ்மக்களின் காலப் பதிவினை அவர்கள் அனுபவித்த இடர்கள் மத்தியில் நடுநிலைமையோடு ஆவணப்படுத்திப் பாதுகாத்த பெருமை இப்பத்திரிகைக்கு உண்டு. இந்நிலையில் 'நமது ஈழநாடு' பத்திரிகையை மகிழ்ச்சியோடு வரவேற்று நிற்கினறோம்.

இன்று யாழ். நகரில் பல பத்திரிகைகள் மத்தியில் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பணி போட்டி மிக்கதாகவும், சவால் நிறைந்ததாகவும் இருந்தாலும் பத்திரிகைகள் உண்மையை உண்மையாக எழுத பல பத்திரிகைகளின் வரவு வழிவகுக்கும் என நம்பலாம்.

பத்திரிகைகள் சமகாலத்தின் பதிவேடுகள். அவை சமகால நிகழ்வுகளை செய்திகளாகப் பதிந்து சரித்திரங்களை உருவாக்குகின்றன. சரித்திரங்கள் உண்மையாக வேண்டுமானால் பத்திரிகைகள் உண்மைச் செய்திகளை உண்மையாக பதிவுசெய்ய வேண்டும்.

இப்பணியினை 'நமது ஈழநாடு' பத்திரிகையும் சிறப்பாகச் செய்ய வேண்டுகிறோம். ஏச்சுக்களையும், எரிப்புக்களையும், தடைகளையும், தடங்கல்களையும் கண்டு சோர்ந்துவிடாமல் துணிவோடு பணிசெய்ய வாழ்த்துகின்றோம்.

**மேதகு எஸ்.டி.ஜே. தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ். ஆயர்.**



## நமது ஈழநாடு யாழ்ப்பாணத்தின் முன்னோடிப் பத்திரிகையாக திகழும்!

நமது ஈழநாடு எனும் புதிய தினசரிப் பத்திரிகை இன்று தொடக்கம் யாழ்ப்பாணத்தில் நான்காவது தினசரிப் பத்திரிகையாக வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பத்திரிகை இன்று யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளுடன் முன்னோடியாக திகழும் என நம்புகிறேன். பத்திரிகைகள் வழமையான செய்திகள் மற்றும் பிரசுரங்களோடு மாணவர்கள், இளம் சமூகத்தினர் பயனைப்பெறுவதாகவும்,, அறிவை மேலும் வளர்க கக்கூடிய வகையிலும் பல்துறை சார்ந்த ஆக்கங்கள், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருவது நாட்டுக்கு சிறந்த வரப்பிரசாதமாக அமையும்.

இவ்வாறாக புதிய பத்திரிகை வெளியீடுகளை ஆரம்பிக்கும்போது இவை சிறுபகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் அளிக்கின்றன. யாழ்ப்பாண பிரதேசத்தில் மட்டுமன்றி ஈழத்தமிழர்கள் அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் இப்பத்திரிகை வெளியீடுகள் விஸ்தரிக்கப்படவேண்டும்.

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.




## யாழ். மண்ணில் தரமான பத்திரிகையாக மலரட்டும்!

'நமது ஈழநாடு' பத்திரிகை வெளிவர இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று சமுதாயத்தில் மக்களுக்கு தகவல் தரும் சாதனமாகவும், அறிவு புகட்டும் சாதனமாகவும் விளங்குவது பத்திரிகைகளே ஆகும். பத்திரிகைகள் எவ்வளவு பெருகினாலும் பயனடைவது மக்களே .

ஈழநாடு யாழ்ப்பாணத்தின் பழம் பெரும் பத்திரிகை. இப்பத்திரிகையில் என். சபாரட்ணம் அவர்கள் ஆசிரிய தலையங்கம் எழுதிய போது இதன் புகழ் உச்சம் அடைந்தது. ஈழநாட்டின் ஆசிரிய தலையங்கங்கள் பின்னர் "ஊரடங்கு வாழ்வு" என்னும் நூல்வடிவம் பெற்றன. இப்பத்திரிகையின் இலக்கோடு மீண்டும் யாழ் மண்ணில் ஒரு தரமான பத்திரிகையாக 'நமது ஈழநாடு' மலரும் என்று நம்புகிறேன்.

**அதி வண. பேராயர். கலாநிதி எஸ். ஜெபநேசன்**
தென்னிந்திய திருச்சபை.



## அடுத்த இளைய தலைமுறைக்கு சமாதானத்தை உணர்த்தட்டும்!

"நமது ஈழநாடு" பத்திரிகைக்கான இந்த வாழ்த்து மடலை வழங்கக் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சிக் குரியதாகும். ஒரு சுதந்திர ஊடக இயக்கத்தின் தேவை மிகவும் அழுத்தமாகத் தெரியும் இந்த தருணத்தில் தங்களுடைய பத்திரிகைக்கு முக்கிய பொறுப்புண்டு. மேலும் நாட்டின் நிலையான சமாதானமே இக்காலகட்டத்தில் முக்கிய தேவையாகவுள்ளது. அதற்கான தங்களுடைய பத்திரிகையின் பங்களிப்பு அடுத்து வரும் இளைய தலைமுறைக்கான சேவையாகவே கருதுகின்றேன்.

**மீகஹ விதுரேஞானரத்னதேரர்,விகாராதிபதி**
**ஸ்ரீநாக விகாரை, ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**



## அனைத்து மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற வாழ்த்துகிறேன்!

வாசிப்புத்தான் மனிதனைப் பூரணப் படுத்துகின்றது. எல்லோராலும் பெரிய நூல்களை வாசித்துவிட முடிவதில்லை. ஆனால் எல்லோரும் வாசித்துப் பூரணமடைவதற்குரிய ஒரு தொடர்புசாதனமாக பத்திரிகைகளே விளங்குகின்றன.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில், இருந்து மலரும் 'நமது ஈழநாடு' தமிழ் மக்களை, வாசிப்பதன் மூலம் பூரணப்படுத்துவதற்குப் பணியாற்றும் என நம்புகின்றேன்.

அனைத்து மக்களினதும் தேவைகளை நிறைவுசெய்யக் கூடிய வகையில் 'நமது ஈழநாடு' நீண்ட காலம் நிலைத்திருந்து நற்பணியாற்ற எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**க.சண்முகநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்.**



## பூரண சந்திரனைப்போல் தாயக வானில் பிரகாசிக்கட்டும்!

தமிழ் பேசும் மக்களின் முன்னோடி நாளிதழான 'நமது ஈழநாடு' யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவர இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஈழநாடு முன்பு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த வேளை பத்திரிகாதர்மத்திற்கு இணங்க பக்கசார்பற்ற நிலையில் செய்திகள் வெளியிட்டதுடன் விசேடமாக முஸ்லிம் சமூகத்தின் செய்திகளையும் முக்கியம் கொடுத்ததுடன் முஸ்லிம் மக்களின் வருடாந்திரக் கால அட்டவணைகளையும் தமது நாளிதழ்களில் பிரசுரித்து வந்தது என்பதை இங்கு நினைவு கூர கடமைப் பட்டுள்ளோம்.

அதேபோல 'நமது ஈழநாடு' பத்திரிகை வளர்பிறை போல வளர்ந்து பூரணசந்திரன் போல தமிழர் தாயகத்தின் வானிலே பிரகாசிக்க எமது முஸ்லிம் மக்களின் சார்பாக ஆசி கூறுகிறோம்.,

**மௌலவி எவ்.எம். மௌஹிதீன்,**
**ஜூம்ஆ பள்ளிவாசல்,**
**பெரியகடை ,**
**யாழ்ப்பாணம்.**

**நமது ஈழநாடே வருக!**

சகல அளவுகளில் கறுப்பு வெள்ளைப் படங்களையும், மங்கள நிகழ்வுகளை சிறந்த முறையில் கலர்படம் பிடித்துக் கொள்ளவும், அல்பம் தயாரித்தலுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**சர்மிளா போட்டோ**

302, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி-003)

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**நிருத்திகா ஜுவலர்ஸ்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.
(சி-12)

22 கரட் தங்க நகைகள் நவீன அழகிய டிசைன்களில் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்வதற்கு உகந்த ஸ்தாபனம்

**சிறி நதியா நகை மாளிகை**

நங்கையர் விரும்பும்
நவநாகரீக நகை வடிவங்களை
நம்பிக்கையுடன் செய்து
நலம் பெற நாடுங்கள்
சிறி நதியா நகைமாடம்

இல1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் அருகில்)

T.P:021-2222709

கிளை: 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-010)

நமது ஈழநாடு நம் நாட்டில்
என்றும் நிலைத்திட எமது வாழ்த்துக்கள்
உங்கள் உறவினர்களுடன் உலகெங்கும் தொடர்பு கொள்ளவும், அலுவலக வேலைகள் அத்தனையையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளவும்

**SRI MURUGAN**

303, K.K.S. ROAD, JAFFNA.
T.Phone: 021- 2222670 Fax: 021- 2223214
E.mail: del - smskr @ eureka.lk
(சி-006)

புதுப்பொலிவுடன்
தங்க ஆபரணங்களை
நிதானமாகப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**கலைவாணி நகை மாளிகை**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
111 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
(சி-014)

**வாருங்கள்! வந்து அருந்தி மகிழுங்கள்!**

யாழ்ப்பாணத்தில் பல வகைப்பட்ட குளிர்பானங்கள், உயர் சுவை கொண்ட சிற்றுண்டி வகைகளுக்கு அன்று முதல் இன்று வரை நாட வேண்டிய ஒரே இடம்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-011)

**நமது ஈழநாடே வளமுடன் வருக!**

நவநாகரிகத்திற்கு ஏற்ப புடவை தினுசுகளின் பொக்கிஷம்

**சௌமியா ரெக்ஸ்**

இல: 4, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

077-101980
(சி-008)

**நமது ஈழநாடே வருக!**

யாழ் நகரில் ஒரே இடத்தில்..

சகலவிதமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், கீ ரெக், பாடசாலைச் சின்னங்கள், மொனிட்டர், ப்(F)றிபெக்ட் பட்ஜ்களை செய்து பெற்றிட

**யசோ ஆட்ஸ் பிளாஸ்ரிக்**

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

077-110610

ஈழமண்ணில் மலரும் நமது ஈழநாடே
உன்னை வாழ்த்தி வரவேற்கின்றோம்

TVS

யாழ். நகரில் T.V.S மோட்டார் சைக்கிள்களுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்



**"சுசுகி ரேடர்ஸ்"**

57,59 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

TVS Victor More smiles per hour

விற்பனைக்குப் பிந்திய சேவை உத்தரவாதம்
வாகனப்பதிவும், இலக்கத் தகடும் 15 நாட்களுக்குள் வழங்கப்படும்.
(சி-009)

மங்களகரமான நிகழ்வுகளை தத்ரூபமாக வீடியோ படம் பிடிக்க வேண்டுமா?

வர்ணப் புகைப் படங்களைப் பிடிக்க வேண்டுமா?

கொம்பக்ட் டிஸ்க் மூலம் அனைத்துப் பாடல்களையும் ஓடியோ கசட்டில் பதிவு செய்ய வேண்டுமா?



இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே நிறுவனம்

**சுப்பர்ஸோ வீடியோ ஓடியோ அண் கலர் லாப்**

206, ஜம்பட்டா வீதி,
கொழும்பு-13

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஜப்பானிய கார் உற்பத்தியின் வளர்ச்சி



உலகில் மோட்டார் வாகன உற்பத்தியில் ஜப்பான் எட்ட முடியாத உயர் நிலையில் காணப்படுகிறது. இவ்வளர்ச்சியை ஆண்டு ரீதியாக இங்கு பார்ப்போம்.

1898 - முதலாவது மோட்டார் வண்டி ஜப்பானிய மண்ணுக்கு இறக்கு மதி செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.

1925 - அமெரிக்க போர்ட்(Ford) மொடல் T கார் உற்பத்தி ஜப்பானில் ஆரம்பித்தது.

1952 - வெளிநாட்டு மோட்டார் வண்டி உற்பத்தி நிறுவனங்கள் ஜப்பானுடன் இணைந்து மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்தன.

1954 - முதலாவது ஜப்பானிய மோட்டார் வண்டி கண்காட்சி நடைபெற்றது.

1957 - முழுமையான ஜப்பானிய தயாரிப்பு மோட்டார் கார்களின் உற்பத்தி ஆரம்பித்தது.

1962 - டோக்கியோவில் சொந்தமாக மோட்டார் கார் வைத்திருப்போர் தொகை 5மில்லியன் ஆகியது.

1965 - இத்தொகை மூன்றே வருடங்களில் 20 மில்லியன் ஆகியது.

1968 - உலகில் கார் உற்பத்தி நாடுகளில் ஜப்பான் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

1980 - ஜப்பானிய கார் உற்பத்தி நிறுவனங்கள் அமெரிக்காவில் தமது உற்பத்திச்சாலைகளை நிறுவின.

1985 - வருடாந்த கார் ஏற்றுமதி ஜப்பானிய வரலாற்றில் என்றுமில்லாத சாதனை அளவாக 6.84 மில்லியன் யூனிட்டானது.

1995 - ஜப்பானில் கார்களின் தொகை 70 மில்லியன் ஆனது.

1997-2000 - சூழல் மாசுறாத வகையில், கழிவுப்புகை வெளியேற்றாத மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் உற்பத்தி ஆரம்பித்தது



## கனவுகளின் 'கஜானா'...!

காதல்
உயிர்களைக் கரைத்து விடுகிற
உன்னதம் தான்
ஆனால்
இந்தக் கரைசலில்
நீர்க்குமிழிகள் கூட
நிரந்தரமாகி விடுகின்றன...



காதல்
இரவைப் பறித்துப்
பகலுக்குச் சூட்டிவிடும்
புதிய பூகோளம்...!




காதல்
பகலின் வெப்பக் கதிர்களால்
இரவுக்கு
நெய்யும் போர்வை....!

காதல்
தகரக் கொட்டகைகளைக் கூட
தாஜ் மஹாலாக்கி விடுகின்றது...!


காதல்
கூழாங் கற்களைக் கூட
கூரிய பிரமிட்டுகளாக்கி
விடுகின்றது...!

காதல்
காற்றில் நெருப்பை
ஒளித்து வைத்து விட்டு
நெருப்பில்
நீரின் நிழலைத் தேடுகிற
பூதங்களின்
புதிய பல்லாங் குழி...!



காதல்
ஆணில் பெண்ணையும்
பெண்ணில் ஆணையும்
பிரசவிக்கிற
பிரளயச் சம்பவம்...!

காதல்
சொல்லித்தர முடியாத
ஆனால்
கற்றுக் கொள்ள முடிகிற
கவிதை விஞ்ஞானம்...!



காதல்
சோலைக் காட்டை
சொர்க்கமாக்குகிறது...!
நட்சத்திர வீடுதிகளை
நரகமாக்குகிறது...!

காதல்
கொள்ளையடிப்பதற்காகவே
திறந்து கிடக்கிற
கனவுகளின் 'கஜானா'...!

வலம்புரி ஜான்



## மஞ்சள் திடல்

### பல்சுவை அரங்கு



சார்லி சாப்ளின் என்ற சார்ள்ஸ் ஸ்பென்சர் சாப்ளின் 1889ம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி லண்டனில் பிறந்தார். இவரது தாய் ஹன்னாவுக்கு சார்லி சாப்ளின் இரண்டாவது மகன்.

சாப்ளினின் தந்தையான சார்ள்ஸைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னரே, தாய் ஹன்னாவுக்கு ஸிட்னி என்றொரு மகன் இருந்தார்.

சாப்ளினின் தந்தை சார்ள்ஸ் இசை அரங்கங்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தவர். இதில் இவர் பெரும் பிரபலம் பெற்றவராக இல்லாவிட்டாலும் தமது நிகழ்ச்சிகளைத் திறம்பட நடத்தி வந்தார்.

தாய் ஹன்னாவும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தவள் தான். வியக்கத்தக்க வகையில் பிறர்போல் நடித்து நையாண்டி செய்யும் திறமைசாலி. ஹன்னாவுக்கு இனிமையான, வசீகரமான குரல் இருந்தாலும் கம்பீரமானதாக இருக்கவில்லை.

கலைஞர்களை மேடையில் இருந்தும், சில சமயங்களில் தமது தொழிலில் இருந்தே விலகிடச் செய்யும் கிண்டலும், பரிகாசமும் நிறைந்த வாழ்க்கையைத்தான் ஹன்னா வாழ்ந்து வந்தாள்.

சார்ள்ஸ்-ஹன்னா தம்பதிகள் பெரும் செல்வந்தர்களாக இல்லாவிட்டாலும் இசை அரங்கங்களின் தயவினால் லண்டனில் ஓரளவு வசதியாகவே வாழ்ந்து வந்தனர்.

இசையரங்கு களியாட்டங்கள் சமுதாயத்தின் கீழ்மட்ட மக்களுக்கான மதுபான

## சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

நிலையங்களில்தான் துவங்கின. அங்கே தொழில்முறையில்லாத கலைஞர்கள் மக்கள் வியந்து சிரித்து மகிழக்கூடிய பல்சுவை நிகழ்ச்சிகளை அளித்து வந்தனர்.

பார்வையாளர்களைப் போன்றே கலைஞர்களும் கீழ்மட்ட நிலையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு வாழ்க்கை கடினமானதாகவே இருந்தது.

இருந்தாலும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற பேரவாக்கொண்ட சார்ள்ஸ், ஹன்னா தம்பதியர் போன்ற கலைஞர்களுக்கு அது புகழும், பணமும் சேர்க்கக்கூடிய வாய்ப்பாக இருந்தது.

வீடுகளிலும், கனிவில்லாத தொழிற்சாலைகளிலும் முழு நேரப் பணியாளர்களாக உழல்வதை விட இது அவர்களுக்குச் சிறந்ததாகவே இருந்தது.

1800 இன் முதல் பத்தாண்டுகள் பிரிட்டனில் இசை அரங்கங்களுக்கு ஒரு பொற்காலம். அங்கு இருநூறுக்கு மேற்பட்ட அரங்கங்கள் இருந்தன. லண்டன் நகரில் மாத்திரம் முப்பத்தாறு அரங்கங்கள் இருந்தன.

வானொலியோ தொலைக்காட்சியோ அறியப்படாத அக்காலத்தில் இசை அரங்கங்கள் புகழ்பெற்று விளங்கின. நுழைவுச்சீட்டுக்குப் பணம் புரட்ட முடிந்தவர்களால் இசை அரங்கங்களில் விக்டோரியர் ஆட்சிக்காலத்து பிரிட்டனின் சராசரி வாழ்க்கையின் இன்னல்களை மறக்கமுடிந்தது.

இசையரங்குகளில் பார்வையாளர்களுடன் இணைந்து கலைஞர்களையும் மதுபானம் அருந்த உரிமையாளர்கள் உற்சாகப்படுத்தினர். இதனால் உரிமையாளர்களுக்கு நல்ல இலாபம் கிடைத்தது.

ஆனால் மதுவுக்கு அடிமையான சார்லி சாப்ளினின் தந்தை சார்ள்ஸ் கலகலப்பான கூட்டாளி என்ற நிலையில் இருந்து குடிகாரனாகி விட்டார். இவரது குடிப்பழக்கம் திருமண வாழ்க்கையை மெது மெதுவாக - ஆனால் உறுதியாக அழித்துக் கொண்டிருந்தது.

ஹன்னா இதனால் அதிக கவலையடைந்தாள். ஒரு கலைக்குழுவுடன் சார்ள்ஸ் அமெரிக்காவுக்குச் சென்றசமயத்தில் ஹன்னாவுக்கு புதிய நண்பர்களின் சகவாசம் கிடைத்தது.

அதில் லியோட்ரைடன் என்ற சிறந்த பாடகனும் ஒருவன். அவன் ஹன்னாவிடம் பரிவுகாட்ட, அவனிடத்தில் அவள் மனதைப் பறிகொடுத்தாள்.

இந்நிலையில் சுய சிந்தனை மழுங்கிப் போக 1892ம் ஆண்டு ஜோர்ஜ் ட்ரைடன்வீலர் என்ற மகனை அவள் பெற்றாள். குழந்தை பிறக்கும்வரை அவளுக்குப் பண உதவிகளைச் செய்துவந்த பாடகன் ட்ரைடன் குழந்தை பிறந்ததும் ஹன்னாவிடம் இருந்து விலகி விட்டான்.

சார்ள்ஸ் ஹன்னாவின் திருமண வாழ்க்கை முறிந்து போனதைவிட, இப்போது ஹன்னாவிடம் மூன்று குழந்தைகளை வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு வந்தது.

சார்லிசாப்ளினுக்கு அப்போது மூன்றரை வயதும், ஸிட்னிக்கு எட்டு வயதும் ஆகியிருந்தது. சுபாவத்திலேயே அன்பையும் ஆதரவையும் பொழியும் தாயாக இருந்ததால் மூன்று குழந்தைகளிடமும் அவள் அன்பைக் கொட்டினாள்.

அவர்கள் ஏழ்மையில் வாடினாலும், பாசத்தால் ஒருவரோடு ஒருவர் பிணைந்திருந்தனர். இந்த நிலையில் அவர்களது வீட்டுக்குத் திடீரென வந்த ட்ரைடன் ஆறுமாதக் குழந்தை ஜோர்ஜ்ஜை பறித்துக் கொண்டு சென்று விட்டான். இதனால் ஹன்னா செயலிழந்து போனாள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# ஜப்பானிய மரவீடுகள்




உலகில் மரத்திலான வீடுகளை அதிகமாக கொண்ட நாடு ஜப்பான்தான். இங்கு சுமார் 3,345 மரத்திலான கலாசார பொக்கிஷங்களாக கருதப்படும் பிரபல கட்டிடங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கலாசார பொக்கிஷங்கள் நல்ல பராமரிப்புக் காரணமாகவே இத்தனை ஆண்டுகால காலநிலைகளையும் தாங்கி தப்பித்து வந்துள்ளன. இங்கு நல்ல பராமரிப்பு என்றால் என்ன எனும் கேள்வி எழுகிறது.

மரத்திலான கட்டிடங்கள் இயற்கை அழிவுகள், தட்பவெப்ப மாற்றங்களை தாங்கக்கூடியவை அல்ல. இத்தகைய வீடுகள் ஒவ்வொரு 100வருடங்களுக்கும் ஒரு தடவை சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் 400 வருடங்களுக்கு ஒரு தடவை முழுமையாக கழற்றி திருத்திப் பூட்ட வேண்டும். இத்தகைய நல்ல பராமரிப்பே இம்மரக்கட்டிடங்களை ஆயிரம் ஆண்டு சென்றாலும் அதன் அழகை இழக்காமல் இருக்கச் செய்யும். இவை எல்லாம் மேற்கத்திய கல்லினாலான கலாசார பொக்கிஷங்களுக்கு பொருந்தாது.

எமது நாட்டிலும் இத்தகைய அரும் பொக்கிஷங்கள் இருக்கின்றபோதும் அவற்றைப் பேணிப்பாதுகாக்கும் மரபு மறைந்து விட்டது வேதனைக்குரியது. இதனால்தான் எமது முதுசங்களான அரும் பொக்கிஷங்கள் எமது மண்ணிலிருந்து கடத்தப்படும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது. எனவே எமது மண்ணின் பொக்கிஷங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கும் எம் இனத்தின் பெருமையை அறியச் செய்யவேண்டாமா? உரக்கவே சிந்திப்போம்.





நாங்கள் செல்லப்பிராணிகளாக வீட்டில் வளர்க்கும் நாய்கள் நாம் பேசுவதைப் புரிந்து கொள்கின்றன என்று நாம் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்கிறோம். இதில் ஆச்சரியப்படுவ

# மிருகங்களின் பேசாத பாஷை

தற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், பல ஆயிரம் வருடங்களாகவே நமக்கும் இவ்விலங்கினத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

நாய்களைப் பொறுத்தவரை நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இவை ஓநாய்களின் இனமாகும். இவை இன்னும் தமது காட்டிலிருக்கும் சொந்தக்காரர்களின் (ஓநாய்களின்) பாஷைகளைப் பயன்படுத்துகின்றன.



நீங்கள் வீட்டிற்கு வரும்போது உங்கள் நாய் பாய்ந்து உங்களை நக்குவது, ஒரு வரவேற்பு சமிக்ஞை (Welcome Signal) ஆகும். இவ்வாறே, ஒரு ஓநாய்க்குட்டியும் இரை கொண்டுவரும் தன் பெற்றோரிடம் நடந்து கொள்கிறது. நாய்கள் கைலாகு கொடுப்பதும் நமக்குப் பெருமையான ஒன்றுதான். இதுகூட ஓநாய்கள் செய்வதுதான். ஒரு ஓநாய்க்குட்டி இன்னொன்றிடம் தனது முன்னங்காலை நீட்டினால், அதன் அர்த்தம் "விளையாட வா" என்பதாகும்.

ஆகவேதான், நமது செல்லப்பிராணிகள் நம்முடன் இவ்வாறு பாஷையில்லாமலேயே பேசிக்கொள்கின்றன என்பது வியப்பில்லைத்தானே.





# குட்டிப் புலி கஜன்

கனேடிய, அமெரிக்க பத்திரிகை உலகில் கஜன் என்ற இலங்கைத் தமிழ் சிறுவன் நன்கு அறிமுகமானவன். எட்டே வயதான இந்தச் சிறுவனின் சாதனைகளைக் கண்டு பலரும் வியந்து போய் இருக்கிறார்கள்.



அப்படி என்னதான் இந்தச் சிறுவன் சாதித்துவிட்டான்.... என்று நினைக்கிறீர்களா?

கோல்ஃப் விளையாட்டின் இணையற்ற நாயகன் எனக்கருதப்படும் ரைகர் வூட்ஸ் இன் சாதனைகளை முறியடிக்கத்தக்க வகையில் கஜன் கோல்ஃப் விளையாட்டில் சாதனைகளைப் புரிந்து வருகிறான்.

இரண்டாவது வயதில் கோல்ஃப் விளையாட்டில் இறங்கிய கஜனை அமெரிக்க, கனேடிய பத்திரிகைகள் 'குட்டிப்புலி' (Little Tiger) என்றே எழுதுகின்றன. அந்தளவுக்கு அவனது விளையாட்டுத்திறமை வியக்கப்படுகின்றது.

1990 இல் இலங்கையில் இருந்து சென்று கனடாவில் குடியேறிய சிவபாலசிங்கம் ஷிராணி தம்பதிகளின் மகனான கஜன் 13வது வயதிலேயே சர்வதேச தரத்திலான கோல்ஃப் போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்து விடுவான் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி - உலகத் தமிழோசை

# களைப்பாயிருக்கிறீர்களா? இதோ ஒரு ட்ரீட்மென்ட்!





களைப்பு அல்லது மன்சோர்வு ஏற்படும் பட்சத்தில், கற்பனையாக ஒரு இடைவேளை எடுத்துக் கொண்டால் மன அழுத்தம் நீங்கி விடும். இதற்கு கற்பனையிலான புலக்காட்சி (Visualization) உதவுகிறது. கற்பனையின் சக்தியால் நீங்கள் விரும்பும் அழகான, அமைதியான இடத்திற்குச் செல்லலாம். அதற்கான படிகள் இதோ:

- இருக்கையில் நேராக அமர்ந்தபடி, கண்களை மூடி, ஆழமாகச் சுவாசிக்கவும்.
- நீங்கள் விரும்பிய அமைதியான இடத்தைக் கற்பனையில் முழுமையாகத் தோற்றுவிக்கவும். எவ்வளவு முழுமையாகக் கற்பனையில் கொண்டுவர முடிகிறதோ அவ்வளவு தூரம் நிம்மதி கிடைக்கும்.
- உங்கள் சுற்றாடல் மற்றும் உங்களைப் பற்றிய நினைவுகளைப் புறந்தள்ளிவிட்டு, அக்கற்பனைக் காட்சியிலேயே ஒன்றித்திருங்கள்.
- உங்கள் உணர்வுகளையும் பயன்படுத்துங்கள். அதாவது, வெறுமனே பார்ப்பதோடு நின்றுவிடாமல் அந்தக் காட்சியைக் கேட்டும், நுகர்ந்தும், தொட்டும், சுவைத்தும் பாருங்கள்.
- உங்கள் முழு உடலும் புத்துணர்ச்சி பெறுவதை உணர்வீர்கள். ஐந்து அல்லது பத்து நிமிடங்களின் பின் மெதுவாகக் கண்களைத் திறவுங்கள். உங்கள் மனம் அமைதியடைந்திருக்கும். தொடர்ந்து, ஒழுங்காக, இதைச் செய்து வருவதன் மூலம் காலப்போக்கில் கூடிய பலன்களைப் பெறலாம்.



# அடையாளம் தெரிகின்றதா?



இது எங்கோ ஒரு கிராமத்தில் உள்ள ஆற்றுப்பாலத்தின் தோற்றம் என நினைக்கின்றீர்களா? இல்லை. கொழும்பு நகரின் முக்கிய நுழைவாயிலான களனிப் பாலத்தின் நூற்றாண்டுக்கு முற்பட்ட தோற்றத்தையே படத்தில் காண்கின்றீர்கள். இப்படம் 1880 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. களனி ஆற்றுக்குக் குறுக்கே மரங்களால் அமைக்கப்பட்ட இந்தப் பாலத்தின் எச்சங்களைக்கூட இப்போது காண முடியாது. நவீன கட்டடத் தொழில் நுட்பத்தினுள் புதைந்து போனவற்றுள் இந்த மரப்பாலமும் ஒன்று.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எந்த ஆரம்பத்தையும் திறனுடன் செய்தால்,
நல்ல முடிவுகள் தன்பாட்டிலேயே கிடைத்துவிடும்
-அலெக்ஸ் கிளார்க்

# நமது நோக்கு

## புதிய பொலிவுடன் தளராத பாரம்பரியம்!

இன்று தமிழர் தம் வாழ்விலே ஒரு நன்நாள். தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழாக "நமது ஈழநாடு" இன்று முதல் எம் மக்கள் கரங்களில் உவகையுடன் தவழப்போகின்றது. ஈழத்தமிழர்களின் உரிமைக்குரலாகவும், நடுநிலை நின்று நியாயத் தின் வழியில், பத்திரிகாதர்மத்தின் சத்தியத்தை- தளராத துணிவுடன் அறைகூவும் மக்களுக்கான ஊடகமாகவும் தன்னை வரித்துக் கொண்டு "நமது ஈழநாடு" இன்று முதல் எம் மக்களைச் சென்ற டையத் தொடங்குகின்றது.

"ஈழநாடு" என்ற பெயர் எமது மக்களுக்குப் புதியதல்ல. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து தமிழர் தாயகத்தின் முதலாவது தினசரியாகவும், தமிழ்த் தேசியத்தின் குரலாகவும் ஒலித்திட்ட "ஈழநாடு" - எமது மக்களின் இதயங்களில் தனக்கெனத் தன்னிகரில்லாத இடத்தைப் பிடித்துக் கொண்ட மக்கள் தினசரி என்பதை யாரும் மறந்து விட முடியாது.

வெகுசன ஊடகங்களுக்கு அவசியம் இருக்க வேண்டிய சமுதாய நலன் பேணும் நோக்கினை தனது உயர் இலட்சியமாகக் கொண்டு , ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகத் தன்னையும் முழுமையாக இணைத்து "ஈழநாடு" ஆற்றிய பணிக்கு வரலாற்றில் தனி இடமுண்டு.

காலத்துக்குக் காலம் இன அடக்குமுறைகளையும், அடாவடித்தனங்களையும் நேரடியாகவே எதிர்கொண்டு- அந்தச் சவால்களையெல்லாம் கடந்து, தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளிவந்து அயராத முயற்சியின் ஒரு சின்னமாக "ஈழநாடு" திகழ்ந்தது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

வணிக நோக்கையே மையமாகக் கொண்டதாக இயங்கும் ஊடகங்கள் மத்தியில் "ஈழநாடு" மக்களின் தேவைகளை அறிந்து அத் தேவை களை நிவர்த்தி செய்யும் பாரிய பொறுப்பையும் செவ்வனே செய்து வந்தது.

இன்றும் எம் மக்களால் நினைவு கூரப்படும் சபாரட்ணம், கே. பி. ஹரன், எஸ்.எம். கோபாலரட்ணம் போன்ற ஈழப்பத்திரிகையுலக ஜாம்பவான்களின் வழிநடத்தலில் தனக்கென ஒரு பாரம்பரியத்தையும் உருவாக்கிக் கொண்டது "ஈழநாடு".

இத்தனை சிறப்புக்கள் கொண்ட ஈழநாட்டின் பாதையில் இன்று "நமது ஈழநாடு" தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழாக உலாவரத் தொடங்குகின்றது.

சமூகத் தொடர்புப் பணியின் பொறுப்புணர்வுடனும் ஆக்க இயக்கங்களுடனும் மனித மேம்பாட்டுக்கான ஊடகமாக "நமது ஈழநாடு" தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்.

உண்மை,நன்மை,அழகு ஆகிய மூன்று நிலைகளின் ஊடாக - உண்மைகளை மக்களுக்கான நன்மையுடன் முதன்மைப்படுத்தி அவற்றை அழகுணர்வுடன் "நமது ஈழநாடு" மக்களுக்குத் தரும்.

தனியே ஒருவழித் தொடர்பாடலாக அமையாது மக்கள் பங்கேற்கும் (participatory structure) பொதுமன்றமாக "நமது ஈழநாடு" விளங்கும்.

மக்கள் மீதான ஆதிக்கமுறை அகன்ற சமூகப் பொறுப்பு அனுகுமுறையில் "நமது ஈழநாடு" செயற்பட்டு -வெகுசன ஊடகங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழும்.

தகவல்களை அளித்தல்,கல்வி, பொழுது போக்கு ஆகிய பணிகளினூடாக"நமது ஈழநாடு" ஒரு முழுமையான பத்திரிகையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்.

இவை அனைத்தோடும் - ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த உணர்வின் வெளிப்பாடாகவும், அவர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலையை - தெளிவுடனும், உறுதியுடனும் முன்னெடுத்துச் செல்லவும் "நமது ஈழநாடு" திடசங்கற்பம் கொண்டுள்ளது.

# உலக வல்லரசுகளின் சுயநல அரசியலும் அடக்கப்படும் மக்களின் சுதந்திரக் குரல்களும்!

இன்று 'உலகம் ஒரு கிராமமாகி விட்டது' என்று ஐரோப்பிய மையவாத சிந்தனைத் தெறிப்பு ஊடாக உலகில் பிரமாண்டமான பிரச்சாரத்திற்கும் பரிமாற்றத்திற்கும் உட்பட்டுள்ளது. இன்றைய நவீன உலகில் சர்வதேச நிதிச் சந்தைகளில் ஏற்பட்டு வரும் துரித வளர்ச்சி, தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளிடையே ஏற்பட்டுவரும் வளர்ச்சியும் உத்வேகமும்,வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பெரும் பாய்ச்சலும், உலகளாவிய பெரும்பாக (mega) சந்தைகளின் எழுச்சியும், உலகமய மாக்கப்பட்ட போக் குவரத்து மற்றும் தொடர்பாடல் பெருக்கத்துக்கு ஊடாக ஐரோப்பிய மையவாத சிந்தனைப் போக்கும் கருத்துக்களும் வியாபித்துச் செல்கின்றன.



இவ்வாறு வியாபித்துச் செல்லும் கருத்தியல் வடிவமே உலகம் கிராமமாகிய கதை.

கிராமமாகிய உலகில் யுத்தங்கள், சண்டைகள், மோதல்கள் இல்லாத பூமிக்குச் சந்தை விஸ்தரிப்பு சக்திகள் சில கருத்தியல் கருவிகளை **(Ideological tools)** பயன்படுத்தி வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் இன்றைய 'சுயநிர்ணய உரிமை'.

## 'சுயநிர்ணய உரிமை' - ஓர் பார்வை

இற்றைக்கு இருநூறு ஆண்டுகள் வரலாறு கொண்ட சுயநிர்ணய உரிமை, காலத்திற்கு காலம் அக்காலத்திற்குரிய இயங்கு சக்திகளின் வசதிக்கேற்ப பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பது பட்டவர்த்தனமான உண்மை என்றால் மிகையாகாது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு இருதுருவ சர்வதேச அரசியலில் சுயநிர்ணய உரிமை என்பது முதலாளித்துவ மற்றும் சோசலிச முகாங்களின் சிந்தனைப் பள்ளிகளின் **(Thoughts of school )** தோற்றப்பாடுகளும் விழுமியங்களுக்கும் அப்பால் இருதுருவ வல்லரசுகளின் அரசியல், இராணுவ, மற்றும் கருத்தியல் விஸ்தரிப்பு வாதத்திற்கும் சர்வதேச உறவுகளின் பேணுகைக்குமே பெருமளவில் யதார்த்த ரீதியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் அதுவும் மிகையல்ல.

இரு துருவ சர்வதேச அமைப்பில் புவிசார் அரசியலின் தாக்கமும், வல்லரசுகளின் தமக்கிடையேயான ஏவுகணைத் தாக்கு அச்சுறுத்தலுள்ள பிரதேசங்களும் - சர்வதேச ரீதியில் வல்லரசு இராணுவ மையங்களை ஒன்றுக்கு எதிராக ஒன்று வைத்திருக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

இந்தவகையில் வல்லரசுகள் ஒவ்வொன்றும் தமக்குத் தேவையான புவிசார் நலனிற்கு ஏதுவாக - தனக்குச் சார்பான பிரதேசத்தை உருவாக்கவும் மறுபுறத்தில் எதிரிக்கு அப்பிரதேசம் அச்சுறுத்தலாகவும் விளங்க வேண்டிய வகையில் - எதிரியின் மேலாதிக்கம் மிகுந்த பிரதேசங்களில் " சுயநிர்ணய உரிமை" என்ற கருத்தியல் தளத்தை பயன்படுத்தின. இத்தகைய குறுகிய இராணுவ அரசியல் நலனுக்காகவே - "சுயநிர்ணய உரிமை" என்ற சுதந்திர அறைகூவல், வல்லரசுகளின் கையாளலுக்கு உட்பட்டது. இச்செயற்பாடானது தமக்குத் தமக்குச் சார்பான நலன்சார்ந்த பிரதேசப் பகுதிகளை உருவாக்க வல்லரசுகளுக்குப் பயன்தர உதவியதெனலாம்.

1990 களில் கிழக்கைரோப்பிய சோவியத் கூட்டமைப்பு வீழ்ச்சியுடன் ஏற்பட்ட ஒரு துருவ சர்வதேசிய அரசியல் அரங்கிற்கு பல்வேறு பரிணாம வடிவங்களைப் பெற்று வருகின்றன. பெரும்பாக அரசுகளின் தோற்றம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். பெரும்பாக அரசு என்பது **(mega state)** ஒரு வகையில் தேசிய எல்லைகளின் பலவீனத்தினையும் சந்தை சக்திகளின் வல்லமையையும் வெளிக்கொணர்வதாகவே அமைகின்றது. இன்றைய உற்பத்திப்பண்டங்களும் சேவைகளும் ஒரு குறித்த புவியியல், அரசியல் எல்லைகளுக்கப்பாற்பட்டு தகவலின் பரிமாணத்தில் விஸ்தரிக்கப்படுகின்றன. பல்தரப்பட்ட சந்தைகளினதும் உற்பத்தித்திறன்களினதும் மூலப்பொருட்களின் பரம்பலும் பிரதேசத்தின் வல்லாதிக்கமும் பெரும்பாக **(mega state)** அரசினை உருவாக்கும் புறச்சூழலை தோற்றுவிக்கின்றன.

இன்று கிராமமாக்கப்பட்ட உலகில் மூன்று பெரும்பாக அரசுகள் - சர்வதேச உற்பத்திகள், வாணிபம், சந்தைச் சக்திகளை தோற்றுவிக்கும் வல்லமையை கொண்டுள்ளன. அவையாவன - ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான பெரும்பாக அரசு, ஐரோப்பிய ஒன்றிய பெரும்பாக அரசு, மூன்றாவதாக யப்பான் தலைமையிலான ஆசிய பெரும்பாக அரசு என்பவையாகும். இம்மூன்று பெரும்பாக அரசுகள் பற்றி பீற்றர் டக்கர் **(Peter Drucker)** கூறுகையில் - இம்மூன்று பெரும்பாக அரசுகள் மூன்று சந்தை துண்டங்களாகவே வளர்கின்றன. இம்மூன்று சந்தை துண்டங்கள் தமக்கிடையேயான போட்டியைச் சமநிலைப்படுத்த நிறுவப்பட்ட அமைப்பாகவே உலக வர்த்தக நிறுவனம் **(WTO)** அமைகின்றது என வரையறுகின்றார்.

இந்தவகையில் அமெரிக்க மார்க்சிய சிந்தனைவாதியும் மஞ்சஸ்டர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் **(MIT)** மொழியின் பேராசிரியருமான நோம் ஸொம்ஸ்கி - இம்மூன்று பெரும்பாக அரசுகளின் தோற்றம், உலகின் பல்வேறு நாடுகளின் பெரும்பகுதி மக்களையும் மேற்குறிப்பிட்ட பெரும்பாக அரசுகளின் மக்களையும் விளிம்பு நிலைப்படுத்தி, பலவீனப்படும் விளிம்பு மக்க்ளின் துன்பங்களினதும், அவலங்களினதும் ஊற்று மையமாக இம்மூன்று பெரும்பாக அரசுகள் தோற்றமளிக்கின்றன என்கிறார்.

**வேலும்மயிலும் சேந்தன்**

ஆனால் இம்மூன்று அரசுகளும் சர்வதேச அரசில் பெரும்பாக அரசுகளே தவிர, இவை ஒரு அரசுக்குரியதோ அல்லது வல்லரசுக்குரியதோ இல்லை. மாறாக ஒரு பெரும்பாக அரசுக்குரிய அதிகார வல்லமை, இறையாண்மை, இராணுவ வல்லாதிபத்தியத்தை அமெரிக்கா தலைமையிலானபெரும்பாக அரசு தவிர மற்றைய இரு பெரும்பாக அரசுகளும் கொண்டிருக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட்ட வேண்டிய விடயமாகும்.

கிராமமாக்கப்பட்ட உலகில் விஸ்தரிக்கப்பட்ட சந்தைகளின் வல்லாதிபத்தின் ஒரு பக்க விளைவு வடிவமாக உச்சளவிலான உற்பத்தி செலவையும், மேந்தலைச் செலவையும் குறைக்கும் உத்திகளை உபாயங்களையும் உள்ளடக்கிய தேசிய எல்லைகளைக்கடந்த கம்பனிகளின் தொழில் தந்திரோபாயமும், பெருக்கெடுத்த தொழில்நுட்ப அறிவு மற்றும் பிரயோக தொழில்நுட்ப கனதியும் சோசலிச கருத்தியலையையும் தொழிலாளர் வல்லமையையும் நன்கு குறைத்துள்ளது.

( நாளை தொடரும்)

# குடாநாட்டில் வாந்திபேதி அபாயம் இன்னமும் நீங்கி விடவில்லை!

## விழிப்புடன் இருக்க மக்களுக்கு அறிவித்தல்.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாந்திபேதி நோய் அபாயம் இன்னமும் நீங்கி விடவில்லை என்பதால் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும், உணவகங்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

குடாநாட்டில் வாந்திபேதி நோய் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாத நிலையில், தொடர்ந்தும் பல நோயாளிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் பலருக்கு நோய்க்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் செறிவாக வாழ்வதாலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதாலும் இந்நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

எனவே - பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் உணவகங்களில் சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

# தெல்லிப்பளை வைத்தியசாலை புனரமைப்பு விரைவில் ஆரம்பம்!

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் மேற்படி வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வைத்தியசாலையின் சுற்றுப்புறங்களை பொது அமைப்புக்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு பழைய இடத்தில் இயங்கத் தொடங்கிய பின்னர் அங்கு புற்றுநோயாளர்களும் சிகிச்சை பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட இருப்பதாகவும் அறிய முடிகின்றது.

1990ம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இவ் வைத்தியசாலை சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (68)

தமிழர் தாயகத்தின் முன்னோடி நமது ஈழநாடே வருக... வருக...



கண் பரிசோதித்துக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ள,
உறுதியான பற்களை கட்டுவதற்கு,
மிதப்பு பற்களுக்கு 'கிளிப்' செய்து கொள்ள, நீங்கள் நாட வேண்டிய இடம்:



**றெனி பல் மூக்குக் கண்ணாடி அகம்**

(RENNY DENTAL OPTICALS SERVICE)

(சி-005) T.P: 2223703

**VENKADESWARA**



**வெங்கடேஸ்வரா**

T.P: 021 - 2222905

**DEALERS IN: CYCLE, CYCLE SPARES**

**சைக்கிள் , சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்**



**වෙංගඩේස්වරා**

79, කස්තූරියාර් පාර, යාපනය

Branch: **SRI MATHAVAN**

97, Kasthuriar Road,
Jaffna.



79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

79, Kasthuriar Road,
Jaffna.

(சி-017)

சீனா, இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட வோஸ் பேசின், கொமேட் செற் வகைகளை பல வர்ணங்களில் மிகக் குறைந்து விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்



**விமாகி**

விமாகி
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-018)

சிங்கர் தையல் இயந்திரங்களை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும், உதிரிப்பாகங்களை நியாயவிலையில் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



**ஊஷா ஏஜென்சி**

**சிங்கர் உத்தரவு பெற்ற விற்பனை முகவர்**

62/32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-015)

# வவுனியாவிலிருந்து வடபகுதிக்கு மீண்டும் மின்சார விநியோகம்?

## 3500 மில்லியன் ரூபாவுக்கு திட்ட மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு மீண்டும் நீர் மின்சாரத்தை விநியோகிக்கும் வகையில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையான உயர்அழுத்த மின்மார்க்கம் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்தவாரம் வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற வடகிழக்கு அபிவிருத்திக்கான இணைப்புக்குழுக்கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டின் பிரகாரம் சுமார் 3500 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது.

மேற்படி மின்மார்க்கம் புனரமைப்புச் செய்வதன்மூலம் பல வருடங்களாக மின்சார வசதியின்றி உள்ள வன்னிப்பகுதி மக்கள் பயன் அடையவுள்ளனர். எனினும் தேவையான நிதி ஒதுக்கீடு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இத்திட்டத்துக்கு வெளிநாட்டு நிதி மூலங்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. யாழ். மாவட்டத்துக்கும் மேற்படி மின்மார்க்கம் விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தடையின்றி மின்விநியோகம் மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

# சமுர்த்தி வங்கிகள் விரைவில் யாழ்ப்பாணத்திலும் திறக்கப்படும்!

## இடங்களைத் தெரிவுசெய்தல் ஆரம்பம்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி வங்கிகள் விரைவில் திறக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. இதற்கான இடத்தெரிவு மற்றும் ஆரம்பப் பணிகளில் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சமுர்த்தி அதிகார சபையைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் குழுவினர் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வங்கிகளை திறப்பதற்கான அனுமதியினை பிரதேச செயலாளர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கு வழங்கியுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் சமூகத்தில் வறுமைநிலையில் வாழும் குடும்பங்கள் தம்மால் இயன்ற சிறு தொகைப் பணத்தை சேமிப்பதன் மூலம் சுயதொழில் மற்றும் அவசர தேவைகளுக்கு வங்கியில் இருந்து கடன் உதவிகள், சலுகைக் கொடுப்பனவுகள் என்பனவற்றைப் பெற்று, தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (57)

## நகராட்சியிலிருந்த காணி ஆவணம் திடீர் மாயம்

(பருத்தித்துறை)

மத்திய மருந்தகம் அமைக்க ஒதுக்கப்பட்ட பருத்தித்துறை நகராட்சி மன்றத்திற்கு சொந்தமானதாகக் கூறப்படும் காணி சம்பந்தமான ஆவணங்கள் யாவும் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி காணியில் அமைக்கப் பட்டிருந்த தேநீர் கடையை அகற்றுமாறு நகராட்சிமன்றம் அறிவித்ததன் காரணமாக, கடை உரிமையாளரினால் மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது. மனித உரிமை ஆணைக்குழுவின் ஆலோசனையினால் யாழ்ப்பாண உயர் நீதிமன்றத்தில் உரிமையாளரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நகராட்சி மன்றத்தில் இவை தொடர்பான ஆவணங்களைக் காணவில்லை என்பது தெரியவந்தது. இவ்வழக்கு இம்மாதம் 22ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நகராட்சிமன்றம் நடப்பு ஆண்டின் நான்காம் மாதத்திற்கான சோலைவரியை இக்காணி உரிமையாளரிடம் அறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (15)

## இன்றைய நாள் இனிய நாள்

**இன்றைய பலன்**
**01-10-2002**
**செவ்வாய்க்கிழமை**

**மேடம் :-** உடல் நிலையில் முன்னேற்றம், மனச்சஞ்சலம், தவறான உறவுகள் தேடிவரும், மாதாவிற்கு சுகயீனம், யாரையும் நம்பாமல் இருத்தல்.

**இடபம :-** பொருள் வரவு, வயிற்றில் நோய், விஷபயம், மரியாதை, எடுத்தகாரியம் வெற்றி.

**மிதுனம:-** தொழில் முன்னேற்றம், வீண்வாக்குவாதம், மனத்தில் உற்சாகம், பொருள் நட்டம், சிநேகிதரால் கவலை.

**கர்க்கடகம :-** தேகசுகம் நன்று, திருப்தியான உணவு, தரும சிந்தனை, புதிய நண்பர்கள் உறவு,

**சிங்கம:-** அதிகாரபலன், மனத்தில் கர்வம், பித்தம் சம்பந்தமான நோய், வீண்பழிகேட்டல், பிரயாணத்தில் கவனம்.

**கன்னி :-** பொருள் வரவு, கண்ணில் ரோகம், பித்தம் சம்பந்தமான நோய், நண்பர்கள் உறவு, பிரயாணக்கஷ்டம்.

**துலாம் :-** எடுத்த காரியம் வெற்றி, பொருள் வரவு, மன மகிழ்ச்சி, புத்திரரால் இலாபம், நண்பர்கள் தரிசனம்.

**விருச்சிகம் :-** நோய் நீக்கம், கடின உழைப்பு, மனப்பயம், பொருள் வரவு, தொழில் சிறப்பு.

**தனு :-** தொழில் முன்னேற்றம், எதிர்பாராத பயம், உடல் பலவீனம், வீண்பழி கேட்டல், நண்பர்கள் தரிசனம்.

**மகரம:-** வாகன சுகம், பணத்தினால் தகராறு, கல்வி முன்னேற்றம், காயம் ஏற்படுதல், அதிக கவலை.

**கும்பம:-** வீண்மனப்பயம், பணவரவு, வெற்றி, வீண் வாக்குவாதம், வயிற்றில் ரோகம்.

**மீனம்:-** வயிற்றில் நோய், எடுத்த காரியம் தடை, பகை நீங்கும், சுதந்திரமான மனநிலை.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

# வரணிப் பிரதேசத்தில் இரவில் மண் கடத்தல்!

(நாவற்காடு)

தென்மராட்சிப் பகுதியில் மண் அகழ்ந்து எடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் இரவு நேரத்தில் மண்கடத்தல் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.


வரணிப் பகுதியிலுள்ள காணிகளில் இருந்து தினமும் இரவு 10 மணிக்குப் பின்னர் மண் அகழ்ந்து உழவு இயந்திரங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

தினமும் மண் அகழப்படுவதால் வரணிப்பகுதியில் உள்ள வயல்களுக்குள் கண்டல்நீர் வரக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

வரணிப் பகுதியில் மண் அகழப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதிக் கிராம அலுவலர்கள் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (92)

# முதியோர் இவர்கள்

**நாம் யாழ்ப்பாணத்தில் சில முதியவர்களைச் சந்தித்தோம். உரையாடினோம். அந்த உரையாடலில் இருந்து அவர்கள் எமக்குக் கூறிய கருத்துக்களை இங்கு முதியோர் தினச் செய்திகளாகத் தருகின்றோம்.**



**பழனித்துரை (வயது - 72)**

வயதுபோன காலத்தில் முதியவர்களுக்கு பாதுகாப்பு அவசியம். ஏனெண்டால் இந்த வயதில இவர்களுக்கு போசாக்கான உணவு, நல்ல மருத்துவ வசதி வேணும்.

இன்றைய காலத்தில் பிள்ளைகள் முதியவர்களை வீட்டைவிட்டு துரத்திற நிலமை வந்துள்ளது. அதனால இவர்கள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகினம். இதனால இவையளை பாதுகாக்கத்தக்க வகையில இன்றைய இளைஞர்கள் செயற்பட வேணும். இவ்வாறான விழிப்புணர்வை அவர்கள் ஏற்படுத்தும் வகையில முதியோர் தினம் கொண்டாடப்பட வேணும்.



**சதாசிவம் (வயது - 82)**

முதியவர் தினம் கொண்டாடுவது நல்லதுதான். ஆனால் உது பற்றி எனக்குத் தெரியாது. ஆரும் செல்லுறேல்லை.

இண்டைக்குப் பார்த்தால் தாய் தகப்பன் பிள்ளையள பார்த்து வளர்த்து விட அவையள பெத்தவையைப் பார்க்கிறதில்லை.

...களை ஆண்டவன் பாக்கட் ...யள் தங்களைப் பாக்கட்டும ...ன் நாங்கள் இருக்கிறம்.

பிள்ளைகள் தங்களை வளத்து விட்ட தாய தகப்பனை நல்லா வச்சுப் பாக்கவேணும். அன்பா கதைக்க வேணும். அப்பதான் அதுகளின்ர மனசு நிறையும்.



**சின்னம்மா (வயது - 75)**

நாங்கள் எங்கட பிள்ளையள பார்த்ததுபோல எங்கட பிள்ளையளும் எங்களை பாத்தாத்தான் சந்தோஷம். எங்களைப்போல வயசு போனதுகள் பாவம் தானே. அவையல பிள்ளையல் கட்டாயம் பாக்கவேணும்.

எங்களுக்கும் பொழுது போக்கு வேணும். அதுதான் நாங்கள் எங்களைப்போல வயது போனதுகளோட சேந்து இருந்து கதைக்கிறது. துன்பம் எல்லாம் அந்த நேரத்தில இல்லாமல் போகும்தானே.

கொண்டாடுகிற முதியோர் தினத்தில் நிலைமையை எல்லோரும விளங்கி, எங்களைக் காப்பாத்த வேணும்.



**செல்லம்மா (வயது - 60)**

இப்ப நான் தனியத்தான் இருக்கிறன். பாத்து முதியோர் இல்லத்திலதான் போயிருக்கப்போறன். பிள்ளையள் எங்களைப்போல வயசு போனதுகளை பார்க்கிறயில்ல. ஓரளவு எண்டாலும் கைதடி முதியோர் இல்லத்தில பாப்பினம்.

இப்படி இந்த முதியோர் தினம் கொண்டாடுறது நல்லதுதான். அப்படியெண்டாலும் இப்பத்தய பிள்ளையளுக்கு தங்கடை தாய், தகப்பனைப் பராமரிக்க வேணும் என்ற எண்ணம் வரட்டும். தாய், தகப்பன் தங்கட பிள்ளையல சின்னனில இருநது எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்க்கினம். ஆனால் பிள்ளையள் அதையெல்லாம் மறந்திடுவினம். பிள்ளையள் மறந்தாலும் தாய், தகப்பன், பிள்ளையள் எங்கயிருந்தாலும் நல்லா இருக்கவேணும் எண்டுதான் நிணைப்பினம்



**பாலசுப்பிமணியம்**
**வயது - 55**

எனக்கெண்டு ஒருத்தரும் இல்லை. நான தனியத்தான் இருக்கிறன். சகோதரங்கள் இருக்கினம். பாக்கிறதில்லை. என்னைப் போல் நிறையப்பேர் இருக்கினம். அவையளையும் பிள்ளையள் பாக்கிறதில்லை. இவையள எல்லாம் பாக்கிறதுக்கு இளையவர்கள் முன் வரவேணும். இல்லாட்டி நாளைக்கு அவர்களும் இப்படித்தான் வயது போன பின்னால பிள்ளையளால துரத்தப்படுவினம்.

அதனை உணர்ந்து இளையவர்கள் கவனிப்பில்லாத முதியவர்களை ஓரளவுக்கெண்டாலும் கவனிக்கவேணும் கனநேரம் இல்லையெண்டாலும் கொஞ்சநேரமாவது அவர்களோட அன்பாகக் கதைக்கவேணும்.

இப்ப எங்களுக்கு வயசு போட்டுது தான் ஆனால் நாங்களும் இளமையாக இருந்தனாங்கள்தானே. எங்கடை இளவயசுக் காலத்திலை வயசு போனவங்களை நாங்கள் வெறுத்ததில்லை.



**மு. வாமதேவன் (வயது - 62)**

# எம் அரும் முதுசங்கள்!



இந்தக்காலத்து இளைஞர்கள் முதியோர்களை மதித்து நடப்பதில்லை. இவ்வாறு மதித்து நடக்காததற்கு காரணம் தாங்கள் எங்களை விட நிறையப்படித்துவிட்டோம் என நினைப்பதுதான். ஆனால் முதியவர்களை மதிக்காமல் செயல்படும் இளைஞர் சமுதாயம் சிறப்பாக வாழமுடியாது.

பெற்றோரை மதித்து நடந்ததால் இராமனின் புகழ் நிலைத்து நிற்பதனை நாம் அறியமுடிகிறது. இதனை கருத்தில் கொண்டு இளைஞர்கள் முதியவர்களை மதித்து நடக்க முன்வந்தால் எதிர்கால சமூகம் அழிவில் இருந்து தப்பிக்கொள்ளும்.

இன்றைக்கு இருக்கிற இளையவர்கள் பெற்றோரைச் சரியாகப் பராமரிச்சிருந்தால் முதியோர் இல்லங்கள் எல்லாம் நாட்டுக்குத் தேவையில்லாமல் போயிருக்கும். இண்டைக்குப் பிறகாவது எங்கடை பிள்ளைகள் திருந்தி பெற்றோரைக் காப்பாத்தப் பார்க்கட்டும்.

**சந்திப்பு: சங்கர்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிழக்குக் கடலில் மர்மக் கப்பல்கள் நேற்றுக்காலை கடற்படை சோதனை!

கிழக்குக் கடலில் காணப்பட்ட இரண்டு கப்பல்களில் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கடற்படை சோதனைகளை நடத்தியிருக்கின்றது.

நேற்றுக்காலை கிழக்குக் கடற்பரப்பில் காணப்பட்ட இரண்டு மர்மக் கப்பல்கள் தொடர்பான தகவல் கிடைத்ததும் அவற்றைச் சோதனையிடும் நடவடிக்கைகளில் கடற்படைக்கலங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

விமானப் படை விமானங்களின் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனை நடவடிக்கையில் மேற்படி கப்பல்களில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டிருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. வடக்குக் கடலில் சரக்குக் கப்பல்கள் சோதனையிடப்பட்டதை கடற்படை உறுதிப்படுத்தியுள்ளது.

# ஜப்பானியத் தூதுக்குழுவினர் 9 ஆம் திகதி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானியத் தூதுக்குழுவொன்று எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்தும் நோக்குடன் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வருகை தந்த இக்குழுவினர் எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இக்குழுவினர் யாழ். செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றிலும் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் அரச திணைக்கள அதிகாரிகள், வைத்தியசாலைப் பணிப்பாளர், சுகாதாரப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கு....

இருந்து பெற்றுக்கொள்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே பல சர்வதேச நிதி நிறுவனங்கள் நிதிஉதவி வழங்க முன்வந்துள்ளன.

இந்நிலையில் மேற்படி செயற்திட்டத்தை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கான முன்னோடி ஏற்பாடுகள் பலவற்றை அரசு மேற்கொண்டு வருகிறது. இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக நாடு முழுவதும் ஐந்து வலயங்களாக பிரிக்கப்படவுள்ளது. இவற்றில் ஒரு வலயமாகவே வடக்குக் கிழக்குப் பகுதி இருக்கப்போகின்றது.

வெளிநாடுகளிலிருந்தும், சர்வதேசநிதி நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கவுள்ள அனைத்து நிதி உதவிகளும் மேற்படி ஒவ்வொரு வலயங்களுக்கும் பகிர்ந்து வழங்கப்படவுள்ளது. இவ்வாறு கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட வலயத்தில் பல்வேறு உப செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட இருக்கிறது. இவற்றைவிட ஒவ்வொரு வலயத்திலும் தனித்தனியான ஆளணி மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன.

நாளை வடபகுதி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கான விசேட கூட்டமொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அமைச்சர்கள் பலரும் அரச உயரதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி செயற்திட்டம் தொடர்பான பல விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

(க)

## நாடு....

பற்றி ஆராய்வதற்கு இணக்கம் தெரிவித்ததுடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவும் இணங்கியுள்ளார்.

அவருடனான சந்திப்பில் அமெரிக்கதுணை இராஜங்க அமைச்சரின் திட்டம் பற்றியும் அதற்கு முன்னோடியாக நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிதேடும் சர்வதேச மாநாடு பற்றிய விடயங்கள்களையும் அமைச்சர் மொறகொட விபரித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் போரினால் இலங்கையினுடைய ஒட்டுமொத்த அபிவிருத்தியும் வீழ்ச்சி கண்டதாக விபரித்துள்ள அமைச்சர் இலங்கைக்கான அபிவிருத்திக்கு தேவையான நிதியுதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். போரின் பேரபாயத்திலிருந்து இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் நிதியுதவி கோரி நடைபெறவுள்ள, அமெரிக்கா ஒழுங்குபடுத்தவுள்ள, சர்வதேச மாநாடு தனது நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கு உதவவும் பிரிட்டன் தயாராகவுள்ளதாக சோட், அமைச்சருக்கு உறுதியளித்துள்ளார்.

## காரைநகர், பொன்னாலை, மண்டைதீவு

# மக்கள் நடமாட தொடர்ந்தும் தடுத்தால் கடற்படையினருக்கு எதிராகப் போராடுவேன்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

காரைநகர், பொன்னாலை, மண்டைதீவு பகுதிகளில் பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடவும், மீனவர்கள் தடைகளின்றி மீன்பிடிக்கவும் அனுமதி வழங்கப்படாவிட்டால், கடற்படையினருக்கு எதிராக தனது தலைமையில் விரைவில் மக்கள் போராட்டம் நடைபெறுமென இந்து சமய விவகார அமைச்சரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தி. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

காரைநகர், பொன்னாலை, மண்டைதீவு பகுதிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அப்பகுதிகளில் வசித்துவந்த பொதுமக்களை மீளக் குடியமரவும், சுதந்திரமாக நடமாடவும் அனுமதிக்க மறுத்து வருகின்றனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு தமது தொழிலைச் செய்வதற்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. வன்னியிலிருந்து இப்பகுதிகளுக்கு மீளத்திரும்பிய மீனவர்களுக்கு இன்னமும் கெடுபிடிகள் அதிகமாகவுள்ளது.

இந்த நிலையைப் போக்குவது பற்றி வடபிராந்திய கடற்படைத் தளபதி சரத் வீரசேகரவுடன் இன்று காலை 10மணிக்கு காங்கேசன் துறைக் கடற்படைத்தளத்தில் பேச்சுக்களை நடத்தவுள்ளேன். மண்டைதீவு, பொன்னாலை, காரைநகர் கடற்படை முகாம்களின் உயரதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ள இக் கலந்துரையாடலில் பொதுமக்களும் கலந்துகொள்ளலாம்.

அவ்வாறு கலந்து கொள்ளவிரும்பும் பொதுமக்கள் இன்று காலை 9 மணிக்கு முன்னராக எனது வீட்டிற்கு வந்தால், அவர்களை காங்கேசன்துறையில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்.

இந்தக் கலந்துரையாடல் வெற்றியளிக்காத பட்சத்தில் கடறபடையினருக்கு எதிராக எனது தலைமையில் மக்கள் போராட்டங்கள் நடத்தப்படும் மண்டைதீவுக்கான கடற்படையினரின் போக்குவரத்தும் மக்களால் தடுத்து நிறுத்தப்படும் நிறுத்தப்படும் எனக் கூறினார்.

## வட.-கிழக்கு...

விரும்பினார் எனவும் அரசசார்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்கும் அழிந்து போயுள்ள வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தை மீளக்கட்டியெழுப்பவும் பிரிட்டன் அரசாங்கம் எவ்வாறு உதவமுடியும் என ஆராய்வதிலும் பிரிட்டன் தூதுவர் ஆர்வம் காட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் வன்னியை தளமாகக் கொண்ட ஊடகவியலாளர்களுக்கு தகவல் வெளியிட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பிரிட்டன் அரசின் உதவிகளை ஆக்கபூர்வமான முறையில் தாங்கள் நாடியுள்ளதாகவும் - உதவியளிக்க பிரிட்டன் உறுதியளித்துள்ளதாகவும் - பேச்சுக்கள் நன்மையயப்பதாக அமைந்தன என்றும் தெரிவித்தாரென அரச சார்பு ஊடகம் மேலும் தெரிவித்தது.

இன்று வெளிவரும்
"நமது ஈழநாடு"
என்றும் நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்.
MURTHY ADVERTISING SERVICES 2789
யாழ். FMஇல் விளம்பரம்
செய்திட
யாழ். - கொழும்பு
பிரயாண ஒழுங்கு
செய்திட
நாள் வாடகைக்கு
ஆட்டோ அமர்த்திட
மூர்த்தி
விளம்பர சேவை
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்: 2789.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிக்கான நாணய மாற்று விகித விபரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.01 | 96.42 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.82 | 151.16 |
| 1 யூரோ | 96.06 | 95.16 |
| 1 சுவிஸ் பிராங்க் | 64.11 | 65.11 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 51.81 | 52.77 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 25.67 | 25.67 |

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன்
செல்வன்
சு.ஞானாநந்தசர்மா
அவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று, கல்லூரியில் முதலிடத்தைப் பெற்றவரில் ஒருவராக வந்தமையைப் பாராட்டுவதுடன் அவருக்குக் கல்வி கற்பித்து அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும், நன்றி கூறி அவர் மேலும் கல்வியில் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (சி-020) ~ உறவினர்கள்.

## தீரா நினைவுகளோடு



சோதிமுத்து முருகேசு
உடலோடு 1933.06.03 உடல்கழற்றி 2002.09.01



முருகேசு அரியமலர்
உடலோடு 1939.11.13 உடல்கழற்றி 2001.10.05

*ஆறாப் புண்ணின் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் என் நினைவு*

674, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
~ குடும்பத்தினர்.
(002)

DENSHI
புகைப்படம், வீடியோ
மற்றும் டிஜிற்றல் விஷன் சேவைகள்
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்,
T.V. வர்த்தக விளம்பரத்திற்கான
ஒளிப்படங்கள், புகைப்பட அல்பங்கள்
என்பவற்றை சிறந்த முறையில்
தரமாக செய்பவர்கள்
(வீடியோ படத்திற்கு CD இலவசம்.)
(புகைப்படச் சுருள் ஏற்றுக்கொள்ளப்படும்)
DENSHI
தலைமையகம்: இல. 146-2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.
கிளை: கே.கே.எஸ். வீதி, இனுவில் மேற்கு, இனுவில்.
(சி/021)

இப்பத்திரிகை இலக்கம் 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்